உ

கணபதிதுணை.

திருச்சிற்றம்பலம்.

கோயிலூர்
ஸ்ரீசிதம்பரசுவாமிகள்
திரட்டியருளிய

பிரபுலிங்கலீலைத்திரட்டு,
பிரபோதசந்திரோதயத்திரட்டு,
சூதசங்கீதைத்திரட்டு,
திருப்போரூர்சந்நிதிமுறை

குறுங்கழிநெடில்விருத்தம்.

இவை
சமீவனக்ஷேத்திரமென்னுங்கோயிலூர்
அ - இராமசாமிச்சுவாமியவர்களால்,
பலபிரதிகளைக்கொண்டு
பரிசோதித்து,
அலவாக்கோட்டை
பி-நா-நாராயணன்செட்டியார் வேண்டுகோளின்படி

சென்னை:
ஜீவரக்ஷாமிர்த அச்சுக்கூடத்திற்
பதிப்பிக்கப்பட்டன.

சர்வதாரிஸு வைகாசிமீ
1888.
இதன்விலை அணா-௪.

உ

கணபதிதுணை.

திருச்சிற்றம்பலம்.

பிரபுலிங்கலீலைத்

திரட்டு.

கணபதிஸ்துதி.

சுரகுலாதிபன் றூய்மலர் நந்தனம்
பெருகவார்கடல் பெய்த வயிற்றினோன்
கரகநீரைக் கவிழ்த்தமதகரி
சரணநாளுந் தலைக்கணியாக்குவாம்.

முதலாவது

துதிகதி.

சிவஸ்துதி.

பூவாய்நெடுங்கோட்டுறுபசுந்தேன்கைகான்முடங்குபொறியிலித
னுவாயொழுகிற்றெனவுலகமளந்தமாலுநான்முகனுங்
காவாயெனநின்றேத்தெடுப்பத்தானேவந்தெங்கரதலத்தின்
மேவாவமர்ந்தமாமணியைத்தொழுதுவினைக்குவிடைகொடுப்பாம். ()

தேவிஸ்துதி.

ஆதிபகவன்றனதுடறணிப்பான்பணியவவ்விறைவன்
பாதமிறைஞ்சுமதற்குநெற்றிப்பகையுமல்குற்பகையுமாஞ்
சீதமதியுமரவும்விழுஞ்செயற்குமுவகைசெயாமலலே
மாதுபணியுமதற்குமனமகிழுமுமையைவணங்குவாம். (உ)

கணபதிஸ்துதி.

மாரனெடுத்துவளைக்குமொருகரும்பையொடித்துமலர்சிதறி
நாரியடுத்தவளிமாலைகுலையத்துரந்துநயங்தோடி
வீரமனத்துவிளைப்பாகர்குறிப்பினெழுகிவிளையாடு
மீரமதிச்செஞ்சடைக்களிநல்யானையிணைத்தாளேத்துவாம். (ங)

சுப்பிரமணியஸ்துதி.

பாகமொருபெண்குடியிருக்கும்பரமனணியிற்பரித்தமணி
நாகநுழைவுற்றுடல்சுருண்டுகிடந்துநகுவெண்டலைப்புழையிற்
போகமெல்லத்தலைநீட்டிப்பார்த்துவாங்கப்போகுமொரு
தோகைமயில்வாகனப்பெருமாடீணைத்தாட்கமலந்தொழுதிடுவோம். ()

அல்லமதேவஸ்துதி.

கலையைமதிக்கும்புலவர்தமைச்சித்தர்குழாத்தைக்கடவுளரை
நிலையைமதிக்குமுனிவரரை[illegible]மாமுகனைநிரைவளையாச்
சிலையைமிதிக்குநெடியோனைவிழுங்கியுமிழாத்திறன்மாயை
தலையைமிதிக்குமல்லமன்செங்கமலமலர்த்தாடலைக்கணிவாம். (ரு)

வசவஸ்துதி.

வெள்ளவேணிப்பெருந்தகைக்கியாஞ்செய்யடிமைமெய்யாகக்
கள்ளவேடம்புனைந்திருந்தகள்வரெல்லாங்களங்கமறு
முள்ளமோடுமெய்யடியாராகவுள்ளத்துள்ளுமருள்
வள்ளலாகும்வசவேசன்மலர்த்தாடலையால்வணங்குவாம். (சு)

மடிவாலமாச்சையஸ்துதி.

வார்க்குங்குமமென்முலைபாகனடியாரறுவைமாசடித்துத்
நீர்க்குஞ்செயல்போல்விச்சலமன்னவன்றன்சேனைசெய்பிழையை
தாக்குங்கரவாள்கொடுசின்னபின்னமாகத்தடிந்திட்டுப்
போக்குங்கருணைமடிவாலமாச்சன்பொன்னங்கழல்போற்றி. (எ)

நால்வர்ஸ்துதி.

பெண்ணிற்கரசுதானுகவென்புபெருநீற்றறைபிரச
வண்ணக்கமலமலர்ப்பொய்கையாகச்செங்கன்மாழையாய்
நண்ணச்சிறியநரிகண்முடங்குளையபரியாய்நகர்புகுதப்
பண்ணற்குரியவமுதுறழ்முத்தமிழ்நால்வரையும்பணிகுவாம். (அ)

நூல்செய்தவர்பெயரும் நுதலியபொருளும்.

தண்ணிலவுபுனைசடிலத்திறைபுகழல்லமதேவன்சரிதத்திம்பாற்
புண்ணியரஞ்செவிவாயிற்றமிழ்ச்சங்கத்தான்முகந்துபுகட்டிஞனுல்
எண்ணரியபுகழ்மலயத்திருந்தவனோர்வடிவெடுத்தானென்றுகூறப்
பண்ணியமுத்தமிழ்க்கவிதைச்சிவப்பிரகாசப்பெரும் பேர்படைத்து
[ளானே. (கூ)

அதிகாரிகள்.

புறங்கறையொழுகுசெம்புண்ணில்யென
வறுங்கதைபுல்லியர்கொள்வர்மாமல
ருறுங்களிவண்டினல்லமனெண்காதையைப்
பிறந்துளபயன்பெறுபெரியர்கொள்வரே. (க0)

முதலாவது - துதிகதி முற்றிற்று.

ஆக திருவிருத்தம். க0.

இரண்டாவது

கைலாசகதி.

கொள்ளைவண்டிழிந்துதாதுகுடைந்துழக்குழவுடைந்து
கள்ளழிந்தொழுகுசெம்பொற்கடுக்கைவேய்ந்திலகுவேணி
வள்ளல்வெண்புகழ்திரண்டவளங்கெழுகைலைக்குன்றில்
வெள்ளிவந்தத்தியாசமாகவேவிளைந்ததம்மா. (௧)

கண்பிசைந்தொருசேயின்னுங்கலுழினுந்தனைக்கொடுப்பன்
மண்பிசைந்துண்டமாயன்மறித்திடவலியனல்ல
னண்பிசைந்திறைவனுக்கேநாமிடனுவமென்று
பண்பிசைந்தலைதிரண்டபரிசினின்றிடுமெக்குன்றம். (௨)

ஒழுகுறுமருவியீட்டமொலியினனுகுவெண்டிங்கள்
பழகுறுமுடற்களங்காற்பாகசாதனன்கூர்ங்கோட்டு
மழகளிறுமிழ்மதத்தான்மலர்மிசைக்கடவுளூர்தி
யழகுறுநடையாலன்றியறிதரப்படாவக்குன்றில். (௩)

புரத்தைவென்றநகைக்குமென்போதினேன்
சிரத்தைவென்றசெங்கைக்குஞ்சிலைமத
னெரித்தகண்ணிற்குமின்றெனக்கூற்றடேஉத்
தரித்தவீரக்கழலொடுதாளுற. (௪)

மாணப்பூண்புனைமற்றையுறுப்பெனப்
பூணுட்பட்டிடாதோலையின்பூணென
யாணர்ச்செம்பொனிலங்கொளியோலைமேற்
காணக்காமெதனும்வள்ளைகவின்செய, (௫)

அயனுமாயனுமெனினுயர்ந்தவரென்பதன்றிக்
கயிலைநாயகனமர்திருவோலக்கங்காண்பா
னயனமாயிரமிலாமையினதிகனுனென்று
வயிரவான்படையிந்திரரெண்ணிலர்வந்தார். (சு)

குழவிபால்குடிப்பதுகடல்குடிப்பதுகுழவி
பழகுமாறுணன்மண்ணெடுத்துண்பதுபடைப்பு
முழுதுமோர்தளர்நடைமகச்செயலெனுமுரண்கொள்
வழுவிலாவருட்கணங்களெண்ணிகந்தனவந்த. (எ)

செருக்கொடுஞ்சிவநிந்தைசெய்வாய்க்கிலைதீர்வு
விரிக்கினென்றுமுன்சிறுவிதிதலையறவெட்டி
யெரிக்குநல்கிநிந்தனைசெயாமறிமுகமியைத்துத்
தருக்கிநின்றவவ்வீரன்வந்தொருபுடைசார்ந்தான். (அ)

காதியாயிரமால்களைப்பிழிந்துமாங்கனிபோற்
கோதுவீசினுங்கடல்கவிழ்த்தனையசெங்குருதி
பாதியாயினுநிரம்புறுக்கபாலபாணியனுய்
மாதுபாதியனவையிடைப்புகுந்தனன்வடுகன். (கூ)

வீரமாதருக்கில்லையென்றுரைப்பதென்விளங்க
வீரமாதெனவறிகிலீரோவெனவிளம்பி
வீரயோகினிவெள்ளமோடமர்பொரவிரும்பும்
வீரகாளியும்புகுந்தனளவையிடைவிரைந்து. (௧௦)

ஒன்றுஞானமோடுயர்வயிராகநல்லொழுக்க
மூன்றுகாலெனக்கொண்டரன்முகத்திளமுறுவ
லேன்றுமாறுநின்முடினன்சுடரவனிருளைப்
போன்றுமாயையைத்தொலைத்திடுபிருங்கியென்புனிதன். (௧௧)

துதிப்பரோர்சிலர்பாடுவரோர்சிலர் துள்ளிக்
குதிப்பரோர்சிலர்கைகளாற்றேளிணைகொட்டி
யதிர்ப்பரோர்சிலர்நெக்குநெக்குருகிநெஞ்சகமெய்
விதிர்ப்பரோர்சிலராயினரவையிடைமிடைந்தோர். (கஉ)

இன்னணமவையிடையிருந்தவெம்பிரான்
றன்னொடுவினவுமோர்தகைமையுன்னுபு
கன்னலுமமுதமுங்கைப்பவெம்முடை
யன்னைதன்வாய்திறந்தறைதன்மேயினுள். (கஙு)

போகபூமியினிற்போகதனுவினுற்பொருந்தலாகா
தேகமாமின்பசித்தியம்புறிற்கருமபூமி
யாகமானதுகொண்டன்றியாதலான்ஞாலத்தெய்தி
யோகமாநெறியினின்றேருண்மைசாதித்துக்கொள்வர். (கச)

இரண்டாவது - கைலாசகதி முற்றிற்று.

ஆக கதி திருவிருத்தம் - உச.

மூன்றாவது

மாயையினுற்பத்திகதி.

பொறைக்கயிற்றிற்புகழைபின்சொல்லெனும்
விறற்கயிற்றின்விருந்தைக்குரவர்சொன்
மறைக்கயிற்றின்மனத்தைத்திருவைநல்
லறக்கயிற்றினசைப்பவரெங்குமே. (க)

படிக்குளீரப்பலாப்பழுத்தொண்புவி
வெடித்தவாயினனந்தன்மணிவெயி
லடுத்துவானத்தமர்மதியைத்தொடாக்
கடுத்தவேள்குடைக்கரம்பெனத்தோன்றுமால். (உ)

தாழ்ந்தோருயர்வரென்றுமிகவுயர்ந்தோர்தாழ்வரென்றுமறஞ்
சூழ்ந்தோருரைக்குமுரைகண்டாமதில்சூழ்கிடந்ததொல்லகழி
தாழ்ந்தோரனந்தன்மணிமுடிமேனின்றன்றுயர்ந்துதடவரையைச்
சூழ்ந்தோர்வரையினுதிப்பவன்றாட்கீழ்நின்றதபோய்ச்சூழெயிலே.

சொற்போர்புரிவர்நான்மறையாறங்கமுணர்ந்ததொழுகுலத்தோர்
விற்போர்புரிவர்நெடியசிலையிராமனனையவிறல்வேந்தர்
பொற்போர்புரிவர்பிறர்பொருளுந்தமபோற்பேணிப்புரிவணிகர்
நெற்போர்புரிவரந்நகரில்வேளாண்குலத்துநெறியினரே. (ச)

உடுப்போர்க்குடுக்குந்துகில்களாலுண்போர்க்குண்ணும்பொருள்களாற்
றொடுப்போர்க்கெடுக்குமலர்களாலணிவோர்க்கணியுஞ்சுடரிழையா
லடுப்போர்க்கடுக்குமனைகளாற்குறைபாடுடையதன்றதான்
கொடுப்போர்க்கிரப்பாரில்லாதகுறையொன்றுளதுகூறுங்கால். (ரு)

ஈசனளித்தவொருகோட்டியானைக்கியாங்களிணையாயின்
வாசவனைத்தாங்கீரிருகோட்டியானையெம்மைமானுமெனும்
பாசவுரற்கால்யானையொடுபாண்டிலிழுக்கும்பகடுமாற்
றேசினிரதப்பரிசிறந்தவென்னும்பரிகடெருவகலா. (சு)

முத்தணிகொங்கைமுகங்கள்கறுத்தாண்
மெய்த்திருமேனிவிளர்த்துநரம்பு
பைத்தனமீதுபரப்பவிருந்தாள்
பொய்த்துயில்கொண்டுபுளிக்குமுவந்தாள். (எ)

இங்கொருமாயையென்னுமெழின்முனைதோன்றலோடும்
பொங்குறுமுவகைநெஞ்சம்பொறுக்கலனாகியெய்யும்
வெங்கணைமழையுந்தூவுமென்மலர்மழையுமொன்று
வெங்கணுமதனவேணின்றிடையறச்சொரிந்தானம்மா. (அ)

கண்ணகனிலத்தகங்கைக்கரையிலுமுழையிடத்தும்
புண்ணியவனத்துமெய்திப்புற்றுமாய்மரமாயுற்றுந்
தண்ணியபுனலிற்றீயிற்சார்ந்துமூண்டுயிறுறந்து
பண்ணியதவத்தோர்நெஞ்சும்பதைத்தனமயலின்மூழ்கி. (௯)

ஐம்பெரும்பூதமெல்லாமடக்கழிந்தொழியும்போதுங்
கம்பமினமதுநெஞ்சங்கலங்கியதென்னைகொல்லோ
வம்புறுசெயலிஃதிங்குவந்தவாறெவ்வாறென்னாச்
செம்பொருளுணர்ந்தசீர்சால்செய்தவரிருந்தகாலை. (௧௦)

தளர்ந்துழியுதவுங்கல்விதானெனத்தருவாசப்பேர்
கொளுந்தனிமுனிவர்கோமான்குறுகலுமுனிவரெல்லா
முளங்கனிவரநின்றேத்தியுயர்தவிசிடையிருத்தி
வளங்கெழுமலர்கடூவிவந்தனைசெய்துசொல்வார். (௧௧)

என்றுமெம்முள்ளமெல்லாமெழுதியவிளக்குப்போல
நின்றிடுமின்றென்கொல்லோநிலைதடுமாறுநின்ற
தென்றன்முனிருந்தசெய்யசிறுசுடர்போலவைய
நன்றிதையுணருமாறுநவின்றருள்செய்தியென்றார். (௧௨)

சங்கரியொருசூளாற்றன்றமோகுணவடிவமாயை
மங்கையைவிடுப்பவன்னுள்வனவசைநகரிற்பிள்ளைத்
திங்களினுதித்தாளின்றுசெய்தவக்கிழமைபூண்டி
ருங்கணெஞ்சதனாலாற்றலுடைந்ததென்றவனுரைத்தான். (௧௩)

அருந்தவமுனிநீகூறிற்றுண்மையேயன்றியெங்கள்
பெருந்தவமுயலுநெஞ்சம்பிறழ்தரற்கேதுவில்லை
யிருந்துளம்வருந்தியாய்ந்தவெம்மிடையையமெல்லாம்
பரிந்தனவருளானீயெம்பால்வருகையினாலென்று. (௧௪)

முனிவரர் துருவாசப்பேர்முனிவர்கோன்றனைவழுத்திப்
பனிமலைவல்லியேவப்பட்டெழின்மாயையென்னும்
வனிதையிவ்வுலகில்வந்தவாறுநீவிரித்தியாங்க
ளினிதுணர்வுறுமாறோதுகென்றலுமவனுரைப்பான். (கரு)

பிணிதபவேண்டில்வாழ்நாள்பெரிதுறவேண்டிற்செல்வ
மணிதரவேண்டிற்கல்வியறிதரவேண்டில்வானம்
பணிதரவேண்டின்முத்திப்பயன்பெறவேண்டிலென்று
மிணையறுமல்லமப்பேரெந்தையைநினைப்பரென்று. (கசு)

நெஞ்செனுமகலிலன்பாநெய்நிறைத்துள்ளமென்னும்
பஞ்சுறுதிரியினுச்சிபற்றிடவல்லமப்பே
ரஞ்சுடரிலகவேற்றியருந்தவர்மாயையென்னுந்
துஞ்சிருளகன்றிருந்தார்தொலைபாதவங்கள்செய்து. (கஎ)

மந்தரகிரிப்பேர்பெற்றமத்தெறிகடல்போலையர்
சிந்தனைகலங்கிமெல்லத்தெளிந்தவம்தெரிந்துரைத்தாம்
வந்துமண்பிறந்தவன்றேமாதவர்மனங்கலக்கும்
வெந்திறன்மமகாரன்றன்மகடிறம்விளம்பலுற்றும். (கஅ)

மிடியனொருசெய்யாளனச்செய்விளையக்காக்குஞ்செயல்போலப்
படியில்கல்விவிரும்பினோன்பாடம்போற்றுமதுபோல
வொடிவில்செங்கோன்மனுவேந்தனுலகம்புரக்குமுறைபோலக்
கொடியநோன்புசெய்தீன்றகொடியைவளர்த்தான்யோகினியே. ()

மாயைகவிழமுகங்கவிழ்ந்தமதனனிருந்தானவளிருப்பப்
போயசிலையொன்றெடுத்தெழுந்தான்பொன்னாலியன்றபாவையெழ
மேயவனங்கவேணடந்தான்வேந்தன்பயந்தமகணடப்பத்
தூயதவஞ்செய்தைந்தவித்ததுறவினோர்பாலோடினன். (உ0)

மட்டுக்கணைவேளரணகவளர்த்தகுழற்காடலர்விரவிக்.
கட்டுற்றதுநம்பரன்களத்திற்கடுவும்விழிகள்சிறிதுற்ற
முட்டித்துறவாம்பறவைமயன்முடியிற்படுதன்மெல்லமறைந்
தெட்டிப்பார்ப்பவெனமுகங்கொண்டெழுந்தமார்பிலிளமுலைகள். ()

அன்னநடையுமன்னமிலாவையர்நடையுந்தளர்வெய்தக்
கன்னிநடக்குநடைகற்றாள்கரும்புகசக்குமொழிபெற்றாண்
மன்னுமலர்வீழ்சுரும்பனையமைந்தர்பார்வைக்குறிப்புணர்ந்தாள்
தன்னையரியளெனவறிந்துதானேமனத்திற்றருக்குற்றாள். (உஉ)

மூன்றாவது - மாயையினுற்பத்தி கதிமுற்றிற்று.

ஆக கதி திருவிருத்தம் - சுசு.

நான்காவது

மாயைபூசைகதி.

விலைவரம்பறியாமணிக்கோவைசூழ்விளிம்பு
கலையணிந்தொருதலைமுலைமேலலங்கரித்தாண்
முலையொடுந்துகில்கண்டநாண்முதற்றொடர்ந்தன்றோ
விலகுறுங்கலைவல்லவர்கடபடாமென்றல். (க)

ஓதியாகியவறன்மிசைச்சுவடுறவூர்ந்து
தீதிலாதவொண்சந்தனத்திலகவெண்மதிக்குப்
போதுமோர்சிறுபாம்பெனமயிர்வகிர்ப்பொருந்தச்
சோதிமாமணிச்சுட்டியொன்றொருத்திதூக்கினளால். (உ)

அடுத்துமாதவமழிமினென்றனங்கவேடமக்கு
விடுத்தவோலையைக்கண்கடம்மேற்பழிவிளம்பிற்
கொடுத்தவேண்மிசைநிந்தைகூறுதற்குவைத்திருத்தல்
கடுத்துவாழ்தரவொருத்திபொன்னோலைகாதணிந்தாள். (௩)

தன்னைநிந்தைசெய்வெண்ணகைபேறபழிசார
மன்னியங்கதுநிகரறவாழ்மனைவாய்தன்
முன்னிறந்திடுவேனெனவோன்றுகொண்முறைமை
யென்னவெண்மணிமூக்கணியொருத்திநின்றிட்டாள். (ச)

மயிலெழுந்தெனவெழுந்தனள்கோமகள்வாழ்த்திக்
குயிலெழுந்தெனவெழுந்தனமடந்தையர்குழாங்க
டயிலெழுந்தெனவெழுந்தனநூபுரத்துழனி
வெயிலெழுந்தெனவெழுந்தனமணியணிவிளக்கம். (ரு)

இடையொருசற்றுவாணுதல்சற்றேழையர்
படைவிழிசற்றுவாய்ப்பவளஞ்சற்றிணைக்
குடமொருசற்றிவண்கொள்ளைகொள்ளநம்
புடைபெயரறிவெலாம்போயிற்றேயென்பார். (சு)

இனத்தியல்பாமறிவென்பதுண்மையே
மனத்துயர்செயுமயன்மாற்றுர்றுதா
னனிச்சமெல்லடியினார்நுதலடுத்தலும்
பனித்துடல்வெதும்புமால்படுத்தலாலென்பார். (எ)

இக்குழுமகளிருள்யார்வனப்பினன்
மிக்கவளெனத்தலைவினாவினாரெதிர்
முக்கனிகளுட்சுவைமுதிர்ச்சிபெற்றுள
தெக்கனியதனைநீரியம்புவீரென்பார். (அ)

விடங்குலாமதர்விழிவிரைத்தண்பூங்குழ
னுடங்குநூலிடைப்பிறைநுதற்பொற்கொம்பனார்
குடங்கணானுறுமிளங்குவவுக்கொங்கைபோ
லுடம்பெலாமூடினாலுய்யலாமென்பார் (க(

வாயுரைசெய்சொற்பொருண்மலர்க்கரமுரைப்ப
மீயுயர்விசும்பினெழுமென்புளொலியெல்லாம்
பாயொளியபஞ்சுறுபதத்துறமிதித்துப்
பேயொடுநடித்தவிறைபித்துறநடித்தாள். (கo)

அந்தணனிருங்கலையணங்கிணையுமிழ்ந்தான்
செந்திருவைநேமியிறைசீயெனவெறுத்தா
னிந்திரனருஞ்சசியையெண்ணிலன்மறந்தான்
பைந்தொடிநடிப்பநரர்பட்டதெனுரைப்பாம். (கக)

பொன்னெயிலினின்றியபுழைக்குண்முகம்வைத்துந்
துன்னிமுனாகின்றவவர்தோளிடையிவர்ந்து
மின்னெனநடம்புரியுமெல்லியன்மருக்கு
லென்னும்வெளிகாணியவிடர்ப்படுவர்மைந்தர். (கஉ)

நான்காவது - மாயைகதி முற்றிற்று.

ஆக கதி விருத்தம் - ருஅ.

ஐந்தாவது

பிரபுதேவர் வந்தகதி.

மோட்டிளமுலையிரின்னதன்னுமைமுழக்கங்காதாற்
கேட்டிலமிவ்வாறுண்டென்றுரைப்பவுங்கேட்டிலேமால்
வேட்டுலகனைத்துநின்றுவியக்குமிவ்விஞ்சைகற்றுக்
காட்டியவவன்யார்கொல்லோகாண்கவென்றணங்குரைத்தாள். (க)

அடிக்கமலங்கள்போற்றுமடியவர்வேண்டிற்றெல்லாங்
கொடுத்தருள்கருணைவள்ளல்கொண்டகோலத்திற்கேற்ப
நடிப்பவனுதலாலேநாமவேற்றடங்கண்மாயை
யெடுத்துதவுறவதங்கையேற்றனனிழித்துளோன்போல். (உ)

நினைவவன்புணர்ச்சிமேற்றநெடுங்கணேக்கனங்கனன்ன
னனிமிகுமழகின்மேற்றநாவெறுங்கூற்றின்மேற்று
புனைமலர்வணர்வார்கூந்தற்பொற்றொடிக்கிதனலன்றே
மனமொழிமெய்யொருங்குமங்கையரரியரென்பார். (௩)

வேறு. அள்ளிக்கொளும்பேரழகனருணும்புகலுமவாவாலு
முள்ளக்கருத்தையுயிர்போலுமகளிர்க்குணர்த்துமுளத்தாலு
மெள்ளப்பவளவாய்திறந்துவீடேதலமன்மேவுதற்குப்
பிள்ளைப்பிறைவானுதன்மடவீரென்றாள்பிறரைவென்றாளே. (௪)

இறங்குதுறையினீத்தாயிற்றென்னமாயையிடத்துமயல்
பிறந்தபொழுதேயுயிரளவாய்நின்றதென்னும்பெற்றிமையை
யறிந்துமகளிர்நின்கருத்தையறியவுணர்த்திலல்லமற்குச்
சிறந்தமனையொன்றளிக்குதுமென்றுரைத்துப்பின்னுஞ்செப்புவார்.()

கன்னித்தன்மையழியுமெனுநாணுமுலகங்காக்குமொரு
மன்னர்க்குரியமகளென்னும்பெருமைதானுமத்தளிகன்
றன்னைப்புணர்ந்தாளென்றுவருந்தகாதமொழியுந்தன்னுளத்தி
லுன்னிக்கருங்கண்மடமாயையொன்றுமுரையாதிருந்தனளால். (௬)

வண்டாமரைபோன்முகமலர்ந்துவந்தாள்சென்றமதமானி
கண்டார்மகளிரவனுள்ளங்காயோபழமோகழறென்றார்
தண்டார்வனைமென்குழன்மடவீர்பழமேயென்றுசாற்றினாள்
கொண்டாருவகையவர்மாயையுவகையாரேகூறுவார். (எ)

நாடியவாடிநிழலெனவணைமேனண்ணுறத்தோன்றியவிறையை
யோடினள்விழுந்துதழுவுறத்தழுவவுறுமையாலணைமிசைவிழுந்தே
யாடியினிழலைப்பற்றநீட்டியகையாடியிற்றாக்கநின்றழுது
வாடுறுமழலைப்பேதையேபோலவருந்தினண்மதர்விழிமாயை. (அ)

விண்ணினைக்குத்திக்கையிலேப்பவர்போல் வேனெடுங்கண்ணிய ங்கிருந்த, வண்ணலைத்தழுவித்தழுவிமெய்வருந்தியவசமுற்றணைமி சையுறங்கி, யெண்ணுறுகினைவாலவன் புணர்ந்ததுபோலின்கனவொ ன்றுகண்டெழுந்தாள், கண்ணகனிலத்தினிருள்குடிப்பவனுங்கருங்க டன்முகட்டினிலெழுந்தான். (கூ)

தான்செயுந்தவறுந்தாய்செயுமுனிவுந்தன்மனந்தனைநனிவருத்த நான்செய்வதென்னென்றிருநிலநோக்கிநாணிநீர்விழியுகவிருந்தா, டே ன்செய்மென்மொழியாண் மோகினிகண்டுசினந்தவிர்ந்தகங்கரைந்து ன்மேன், மான்செயும்விழியாய்பிழையிலையென்றாண்மனங்கரைவன் னைபோலுண்டோ. (கய)

ஐந்தாவது - பிரபுதேவர்கதி முற்றிற்று.

ஆக கதிவிருத்தம் கூஅ.

ஆறாவது

விமலைகதி.

இந்தவுலகிற்குதவியாயியன்றதொழில்கள்பலசெய்யு
மைந்தன்வேண்டுமெனநிற்போன்மக்கட்பதடியாகுவா
னந்தவுலகிற்காகினைப்போனறங்கூர்மகனுமத்துவிதா
னந்தமுதவுமகவிருப்போன்ஞானியாகுமென்றெண்ணி. (க)

உடம்பைப்பொறியைக்கரணத்தையுயிரைத்தானென்றுழலாம
லடங்கத்துறந்துதனையறிந்துபேதாபேதமென்னுமயல்
கடந்திட்டிருக்கும்பரமுத்திகாட்டும்புதல்வன்வேண்டுமென
விடும்பைப்பிறவிநோய்தணிப்பவெண்ணுமனத்தானெண்ணினன்.

தறிபோலுடலநேரிருந்தயக்குமருங்கினிருநாடி
நெறிபோய்மீளும்வளியதனைநிறுவிநடுநாடியிற்செலுத்தி
யறிவோர்சிறிதுஞ்சலியாமலன்னப்பெயர்மந்திரமாறிக்
குறிபோயிருந்தவொருகுறியைக்குறித்துக்கொண்டங்கிருந்தனரால்.

வாயுநிற்பமனநின்றுமனந்தானிற்பப்பொறிநின்று
பாயபொறிகணிற்பவிடர்படுபுன்புலன்கணின்றனவா
லாயபுலன்கணின்றமையாலகிலந்தோன்றாதுள்ளத்தே
தூயபரமானந்தபரஞ்சோதிதோன்றக்கண்டிருந்தார். (ச)

வெம்மையொழிந்துநிலத்திழிந்துவிளங்குகதிரோபனிநீங்கி
யெம்மையாளவருமதியோவிடுமிந்தனங்களுகராத
செம்மையொளிவான்பேரழலோதெரியாதென்னவொளிர்ந்ததவர்
தம்மையறியாவுவகையுளந்தழைப்பச்சோதிமதலையே. (ரு)

பண்டுபோசந்தபுசிலரும்பரஞ்சோதியைத்தாந்தம்முளே
கண்டுவாழ்வுபெறுநரலாற்கண்ணிற்காட்டுமெவரில்லைத்
தொண்டுபடுமிந்நிராங்காரசுஞ்ஞானிகடம்முட்கண்டு
கொண்டவொளியையுலகுய்யக்குழவியாக்கிக்காட்டினரால். (௬)

நையாமனத்துநிராங்காரன்ஞானத்திரளாம்பிள்ளைதனை
மெய்யாமுளக்கணன்றியுமிவ்விழியுங்காணப்பெற்றனமென்
றெய்யாவுவகைக்கடன்மூழ்கியேறான்மார்போடுறத்தழுவிக்
கையாலெடுப்பவெங்குநிறைகனவான்கனவாநெய்தாகி. (எ)

நாம்பார்க்குழவியாகாமனம்பாற்குழவியாயினன்
றீம்பாற்கடலிற்றுயில்வோனுஞ்செந்தாமறைமேலுறைவோனுந்
தாம்பார்க்கரியவடிமுடியோன்றானேயையமிதற்கில்லைக்
காம்பாற்புரிந்ததனையதோட்கனிவாய்த்தடங்கணுமையென்றான். (அ)

வேறு. மத்தநெஞ்சகமோடுதம்மதியினொன்றையறைந்திது
மெய்த்துறும்பொருளென்றதைவேதமாகமமோதுமென்
றுத்திகொண்டுரைசெய்தெதிரொன்றைநிந்தைசெய்சமயர்தம்
பித்தையல்லெனுமல்லமாப்பிரபுவெனும்பெயரிட்டனர் (௯)

வருக*வெங்கடமாவியேவருககண்ணுகரமுதமே
வருகவெங்குலதீபமேவருககேடறுசெல்வமே
வருகபாசவினாசனேவருகஞானவினோதனே
வருகவென்றனையுளமகிழ்ந்திடவந்துமேல்விழுமல்லமன். (௧0)

ஆறுவது - விமலைகதி முற்றிற்று.

ஆக கதி விருத்தம் எஅ.

ஏழாவது

மாயைகோலாகலகதி.

நெறிபலமுறையுரைத்துநினைந்திலளதனையந்தோ
மறுகுறுமனத்தளாகிமாயைமால்கொண்டிருந்தா
ளறிவிலர்க்கறிவிப்பார்தாமறிவிலராவரென்று
வெறிமலர்வணர்வார்கூந்தல்விமலைதன்மனந்தளர்ந்து. (௧)
நீர்நிலைகோலாற்காணுநீர்மைபோலிங்குநின்றேன்
சீர்நிலைமாயைதன்னுற்றெளிவுறவறிவலென்னு
வேர்நிலைவடிவமாயைக்கினையனேயலமனென்று
வார்நிலைமுலைமடந்தைவடிக்கணுற்காட்டினாள். (உ)
மெய்த்தவம்பயின்றுபெற்றுவேந்தர்க்குங்கொடாமன்முக்க
ணத்தனுக்கென்றுவாளாவரசன்வைத்திருந்தபாவை
மத்தளிகன்பின்போனண்மகடனையந்தோவாண்டு
பத்தின்மேல்வைத்திருத்தல்பாவமென்றிகழ்ந்தார்கண்டோர். (௩)

பாவமும்பழியுநல்கும்பல்வகைப்புகழறங்கள்
யாவையுமழிக்குமெய்துமின்பமுமதனலெய்து
நோவுநன்மரபுஞ்செய்யுகோன்புநல்லொழுக்குமேன்மை
சாவுமெண்ணூருமனிற்குந்தயங்குபுன்காமமென்பார். (௪)

நாயினுவிளீர்சிறுமுயற்குருளைகணக்குந்
தீயபாலையிற்றனைமறந்தவசத்திற்சென்ற
மாயைமாதுபின்றொடர்ந்துசென்மலர்முகமாதர்
வாயினீரறீஇக்கண்கணீர்சுரந்தனவந்து. (௫)

பற்றியாயிடைவிடுத்ததுநீயிரேபற்றி
யிற்றைநாளுமைவிடுத்திலேனிதனையிவ்வுலக
முற்றுமோதுறுந்தம்பிழைமொழிகுநருளரோ
குற்றநாடியேதிலரிடைகூறுநரல்லால். (௬)

நெஞ்சம்யாதினுலெனையகன்றிடவரிதினைக்குங்
கஞ்சன்மாயையையிலனெனக்கழறவாயுண்டோ
விஞ்சும்வானிறையென்னையெம்மெய்யினுல்விடுவான்
றஞ்சமாயையென்றிகழ்தரத்தக்கசொற்கற்றேய். (௭)

ஏழாவது - மாயை கோலாகலகதி முற்றிற்று.

ஆகத்திருவிருத்தம். (அரு)

எட்டாவது

வசவண்ணர் வந்தகதி.

போக்கரும்வலிபுகன்றுபோய்வருமாயைசொன்ன
வாக்கினில்வருந்துவேனைவள்ளனிநகைசெய்தெள்ளன்
மூக்கிலிமுகத்தின்முன்னர்முகுரங்காட்டுதல்போன்மென்ன
மிக்கிளரிமயமீன்றமெல்லியன்மெலிந்துசொன்னள். (க)

நந்தியென்றனையுணர்ந்தானவன்றனையுணர்ந்தேன்
சிந்தைசெய்தெம்மைநீவிர்தெளிவுறவறிகிலீரென்
றெந்தையெம்பெருமான்கூறவிகழ்ந்துரைசெய்தோரெல்லாம்
வெந்துயர்கொண்டுநின்றார்மீளவும்விமலன்சொல்வான். (உ)

மாசறுநந்திபத்திவார்த்தையாலறியீர்நீவிர்
காசினியதனிற்சென்றுகண்களாலமையக்கண்டு
பேசுதிர்பின்னரென்றுபெருந்தகைநந்திதன்னோ
டீசனெண்கணங்கடம்மையேயினனருளினனே. (ங)

எட்டாவது - வசவண்ணர்வந்தகதி முற்றிற்று.

ஆகத்திருவிருத்தம். (அஅ)

ஒன்பதாவது

அக்கமாதேவி யுற்பத்திகதி.

அறிவருளாதரவடக்கம்வாய்மைமெய்த்
துறவுநல்லொழுக்கமேதூய்மையென்றிவை
யுறவொடுகுழவியாயுடன்வளர்ந்திட
மறுவறுசுமதிதன்மகள்வளர்ந்தனள். (க)

பயக்குறுமினியசங்கரபூசைபல்வகைநெறிப்படவியற்றிச் [சு
செயற்கருஞ்செய்கைசெய்தவரிருந்தார்தென்றிசைகயிலைபோற்சிறக்
மயக்குறுமமணவல்லிருண்மெலியவயிணவமெனுமுடமெழுங்க
வியக்குறுசைவமலரநன்னந்திவெய்யவனுதித்தமைவிரிப்பாம். (உ)

எங்குருநந்திதோன்றுநாட்புதுமையென்சொல்வாங்கண்மூட்டெடென்னும், வெங்குணவமணருளத்தெறிமழுவோன்வேடங்கண்டஞ்சலிசெய்ய, வங்கொருநேயம்பிறந்ததுதிருமாலடியவருளத்தினிலெங்கள்,சங்கரனிறைவனெனவொருஞானஞ்சார்ந்ததுதமையறியாமல்

கொலைகளவழுக்காறவாவொடுவெகுளிகொடுஞ்சொல்பொய்பய
ணிலகூற, ணிலையழிஇயொருவன்செய்நன்றிமறத்தணிந்தனைவஞ்சனை
பிறர்தஞ்,சிலைநுதன்மடவார்க்கருதலென்றினையதீமைகளியாவும்போ
யினவா,னலமலிதருமமூர்த்தியாகியநன்னந்திவானவன்புவிவருநாள்.

சாதியுங்குறியுநீத்துச்சரணரைச்சிவனேயென்று
பாதபங்கயமிறைஞ்சிப்பத்திசெய்குவனந்நந்தி
திதறுசுவைத்திங்கண்டாற்செய்தசெங்கரும்பும்வேம்பும்
பேதமொன்றுருமற்சாதிபெயர்விடுத்தறிதல்போல. (ரு)

மாதர்கடமையகன்றமலிதுறவினரெண்ணில்லார்
கோதையருடனிருந்துங்கொடுமையலிலரெண்ணில்லார்
மேதைகொளருச்சனைக்குவேண்டுவமுழுதுங்கொண்டு
போதுகள்வழாமலீசன்பூசைசெய்பவரெண்ணில்லார். (சு)

விரதங்கள்வேறுவேறுமேவிநிற்பவரெண்ணில்லார்
பரதஞ்செய்மதராரிக்கட்பரத்தையர்மனைகடோறுஞ்
சுரதஞ்செய்பவரெண்ணில்லார்தூயநன்னந்திநாம
வரதன்றனன்பின்வாழும்வழுவின்மாகேசரம்மா. (எ)

ஒன்பதாவது - அக்கமாதேவி யுற்பத்திகதி முற்றிற்று.
ஆகத்திருவிருத்தம். (கூரு)

பத்தாவது

அக்கமாதேவிதுறவுகதி.

மாணுநெடுங்கரிமீதுபுரந்தனில்வந்தானைக்
காணுமடந்தையரேதுமுணர்ந்திலர்காமத்தா
ணுைமிழந்தனர்தூசுமிழந்தனர்நன்றுகும்
பூணுமிழந்தனராவியிழந்திலர்போனார்கள். (க)

உள்ளமார்வமோடேகியம்மடந்தையருரைப்ப
வள்ளலாகியமன்னவன்மனநனிமகிழ்ந்து
தெள்ளுமாரமுதனையவளிருந்தழிச்சென்று
னெள்ளுகாமநோய்கொண்டவனென்செயவிசையான். (உ)

வேறு. வந்தநல்விருந்திருப்பமனையினுற்றருந்துவானும்
பந்தியினுணவுவேறுபண்ணுபாதகனுந்தாயுந்
தந்தையுமுணவுண்ணாதசழக்கனுமுச்சிப்போதி
ஞெந்தவர்தமைநோக்காமனுகர்ந்திடுகொடியன்றானும். (ங)

நிந்தைசெய்யுணவினானுநிருமலன்பூசையின்றி
வந்துணவருந்துவானுமறுத்தலூனுகர்விப்பானுந்
தந்தநல்வினையாற்செல்வஞ்சார்ந்தவர்தம்மைக்கண்டு
சிந்தனைபொறாதழுங்கித்திர்வினுண்மகிழ்வான்றானும். (ச)

கன்றுணவிடாமலான்பால்கறந்துகொள்பவனுஞ்செய்த
நன்றிகொல்பவனுங்கோடிநடுநிலைதவறுவானுங்
கொன்றுயிர்பதைப்பநோக்குங்கொடியனும்போர்க்களத்திற்
றன்றலைவனைவிடுத்துச்சாய்ந்துபோமடமையானும். (ரு)

அடைக்கலமெனவந்தானையளித்திடாதகற்றுவானுங்
கொடுக்குதுமெனவுரைத்துக்கொடானுமொண்கொடைவிலக்கி
விடுக்குறுமவனும்பாவவினையிடத்துதவியாகி
நடக்குறுமவனுந்தேர்க்துநட்டபின்வஞ்சிப்பானும். (சு)

குரவர்தம்முரைகடக்குங்கொடியனுந்துறந்துளார்தம்
வரவெதிர்கண்டெழாதமறவனுமறிந்தான்போன்று
கரவினிலருநூல்கற்குங்கயவனும்புதியராகி
யிரவினில்வந்தநல்லோர்க்கிடங்கொடாதகற்றுவானும். (எ)

முன்புகழ்ந்துரைத்துப்பின்னர்முறுவல்செய்திகழ்வான்றானுந்
தன்பெருங்கிளைநல்கூர்ந்துதளர்வுறவாழ்கின்றானு
மன்புகொண்டொருவன்வைத்தவரும்பொருள்கவர்கின்றானுந்
துன்புறுந்தொழில்செய்வித்துச்சொல்பொருளிலையென்பானும். (அ)

கற்பழிமனைவியோடுகலந்திருப்பவனுமற்றோர்
பொற்புடைமனைவிதன்னைப்புணர்வதற்கெண்ணுவானுஞ்
சொற்பொருளுணர்த்தினானைத்தொழவுளநாணுவானும்
விற்பனவலாதவிற்றுமெய்வளர்த்தழிகுவானும். (கூ)

நலமலிவயலிலாற்றினக்தனத்தாலயத்திற்
சலமலமொழிப்போன்றானுந்தனிவழிவிலக்குவானும்
விலைமொழிபொய்த்துவிற்கும்வெய்யவாணிகனுந்தாழ்ந்த
குலமிலிதன்குற்றேவல்கூலிகொண்டியற்றுவானும். (க0)

உறவுசெய்தறிந்தசொல்லைவுவர்த்துழிக்கூறுவானும்
பிறர்பிழைதனையேநாடிப்பிறரொடுபேசுவானு
முறைவழுவுறுகொடுஞ்சொன்மொனிவிடைமொழிகுவானு
மறிவழிமனைவிசொல்லின்வழிநிற்குமறிவிலானும். (கக)

கலந்தவர்தமைப்பிரித்துக்கலகங்கண்டிடவல்லானும்
புலந்தருநூலினில்லாப்பொருளினைக்கூறுவானு
நலந்தனையழுக்காறெய்திநகைத்திகழ்கிற்போன்றானு
மெலிந்தவரிடத்துமிக்கவெகுளியைப்பெருக்குவானும். (கஉ)

புண்ணியம்பிறர்பொருட்குப்புரிபவன்றானுமிந்த
மண்ணிடையின்பத்திற்காமறுமைசெய்தொழில்விடுக்குந்
தண்ணியவறிவிலானுந்தவத்தரைஇகழ்கிற்பானும்
பண்ணியவினையிலென்றும்பாவமேபயில்கின்றானும். (கங)

மடந்தையைத்தனிக்கண்டங்கிமருவியவரக்கேபோல
வுடைந்துநெக்குருகியாற்றுவுள்ளமோடிளம்பூங்கொம்பே
கடந்திடற்கரியகாமக்கடல்கடந்தேறக்கொங்கைக்
குடந்தரத்திருவுளத்திற்கோடியென்றரசிறைஞ்ச. (கச)

என்றவளவரைநோக்காதேதிலர்போலகன்று
சென்றனணிருமலப்பேர்ச்செல்வனுஞ்சுமதிதானு
நன்றிவணினைந்ததென்றுநம்முடைமரபிற்கெல்லா
நின்றிடும்புகழென்றெண்ணிச்சிறுவினர்தங்களுமம். (கரு)

இன்னணநகரமெல்லாமிரங்கமாதேவியம்மை
கன்னலுமமுதுந்தேனுங்கைப்பப்பேரின்பநல்குந்
தன்னிகர்குருகுகேசன்றன்னையேதேடிச்சென்றாண்
மென்னிழல்விரும்பிமிக்கவெயில்சுடச்செல்வார்போல. (கசு)

பத்தாவது - அக்கமாதேவி துறவுகதி முற்றிற்று.

ஆகத் திருவிருத்தம். (கககக)

பதினொன்றாவது.

கொக்கிதேவர்கதி.

வேறு. பத்தர்தம்மனைதொறும்பத்திப்பிச்சைகொண்
டெத்திறவினையுமின்றிருப்பனல்லம
னுத்தமவென்பெயர்பெயருனக்கெனென்
றத்தனும்வினவத்தன்பெயரறைந்தவன். (க)

அருங்குருலிங்கசங்கமத்திற்காகமெய்
வருந்துறுதொழிலறவறிதிருப்பவ
னருந்துறுபிணமெனவறையுமாற்றநீ
தெரிந்திலையோவெனச்செப்பன்மேயினான். (௨)

வேறு. எய்தற்கரியயாக்கைதனக்கெய்திற்றென்றாலதுகொண்டு
செய்தற்கரியவறங்கள்பலசெய்துதுயர்கூர்பிறவியினின்
றுய்தற்கொருமைபெறவெண்ணாதுழல்வோனுடம்புபொற்கலத்திற்
பெய்தற்குரியபால்கமரிற்பெய்ததொக்குமென்பரால். (௩)

மின்போலழியுமுடல்கொடுநல்வினைசெய்தழியாவுடம்பெய்தி, யின்போடமர்தலாயிருப்பயாக்கைவருந்துமென்றெண்ணி, யன்போடறஞ்செய்திளையாமலருந்திவாளாவிருக்குமவன், றன்போன்மருளரிலையென்றான் றண்பூம்பொழில்வைத்தளிக்கின்றான். (௪)

புறத்துக்கருமம்பலசெய்துபொருப்பையகழ்ந்திட்டெலிபிடித்தாங்
கிறப்பச்சிறியவிண்ணின்பமெய்துமவனோநோவாமன்
மறுத்துச்செயல்களனைத்தினையும்வாளாவிருந்துபேரின்பம்
பெறத்தக்கவனோமருளன்யார்பேசுகென்றானெம்பெருமான். (௫)

பொறியிற்புறத்துமனஞ்செல்லிற்புலனேதோன்றியிடுமகத்திற்
செறியக்கரணம்பராநந்தசிவமேதோன்றுஞ்சிவந்தோன்ற
வறிவிற்பரந்தவிடயமயமாகுமுலகந்தோன்றுமற்
பிறவித்துயரக்கடல்கடந்துபேரின்பஞ்சார்குவரென்று. (௬)

என்னையறிவித்ததுபோலிவ்விஷ்டலிங்கமகம்புறமு
மன்னியிருக்குநெறியினைநின்மலர்த்தாள்பரவுமடியார்க்குப்
பன்னியுணர்த்திச்சரமாகிப்பாரிற்சரிப்பாயெனத்தொழுதான்
றன்னினிலத்தினரரெல்லாந்தகும்பேரின்பம்பெறநினைந்தான். (௭)

கொக்கிதேவனிரந்தமொழிகொண்டுகிளரல்லமதேவன்
றக்கபெரியோர்தமக்கியல்புதாம்பெற்றுள்ளபேறெல்லா
மிக்கவுலகம்பெறுகவெனவேண்டிக்கோடலெனப்புகழ்ந்து
செக்கர்மலர்ப்பூங்கைகளாற்றீண்டித்தழுவியருள்செய்தான். (அ)

பதினோராவது - கொக்கிதேவர்கதி முற்றிற்று.

ஆகத்திருவிருத்தம். (கககூ)

பன்னிரண்டாவது

முத்தாயியம்மைகதி.

அழிவிலானையழிந்தனனென்றுநீ
விழியினூன்மிகுவெள்ளம்பெருக்கினை
கழிவிலாதவாகாயங்கழிந்ததென்
றொழிவிலாமலுளமெலிவார்கள்போல். (க)

சச்சிதானந்தசங்கரனுகவே
யச்சநீங்குபுதன்னையறிந்தவன்
றுச்சமாந்துயர்தோன்மலியாக்கையை
யிச்சியானதையானெனவெண்ணியே. (உ)

ஒண்டரைக்கணொழிவிலருளுருக்
கொண்டடுத்தகுருவருளாற்றனைக்
கண்டமெய்த்தவன்காயந்தனையன
முண்டகெட்டிலையொப்பவிடுப்பனால். (௩)

படியில்வந்தபரமகுரவனாற்
றடையறும்படிதன்னையறிந்தவ
னுடல்விடும்பொழுதொன்றுருமண்மயக்
கடமுடைந்தவாகாயநிகர்ப்பனால். (ச)

கூத்தனுடகக்கோலநடிப்பினைப்
பார்த்துவாய்மையென்றெண்ணிலர்பாருளா
ரேத்துஞானிதன்யாக்கைநடிப்பினை
யோர்த்துமாதவருண்மையென்றுன்னுூர். (ரு)

அரவின்காலரவன்றியறிபவர்
தரையினில்லையசகணன்றன்னைநீ
தெரியினன்றிச்சிறியனறிவலோ
பெருமயான்செய்பிழைபொறுப்பாயென்று. (சு)

வேறு. பங்கனிருந்தபதிக்கருள்செய்து
கங்கையடைந்தகணக்கெனவென்பா
லிங்குறவந்தனையெங்குடியுள்ளார்
தங்கடவந்தருதன்மையினென்று. (எ)

வந்தனைசெய்துவழுத்திமுனின்று
பந்தமகன்றபதம்பெறும்வண்ண
மெந்தையியம்பியெனக்கருள்செய்யென்
றந்தமடந்தையறைந்தனளன்றே. (அ)

தேசிகனல்லமதேவன்மகிழ்ந்து
பாசமகன்றுபரம்பொருள்காணு
நேசமடைந்தனைநின்னைநிகர்ப்பார்
காசினியின்மிசைகண்டிலமென்று. (கூ)

பிறப்பொருகோடிபிறந்துபிறந்து
புறக்கருமங்கள்புரிந்திடினும்போய்
மறப்புறுமாணவவல்லிருளின்றிச்
சிறப்புறுமுத்திசெறிந்திடுவாரோ. (கம)

மரிப்பொடுநிப்புமறிக்குநுமென்று
கருந்தைவெளிக்கருமத்தின்விடுத்து
விரிக்குதனெய்யைவிடுத்தெரிகின்ற
நெருப்பையவிப்பநினைப்பதையொக்கும். (௧௧)

மட்டறவோடுமனத்தைநிறுத்திக்
கட்டுதல்வீடுவிடுத்திடல்கட்டென்
றொட்டியபண்பினுரைத்தலமப்பேர்
சிட்டனவட்கருள்செய்தனனன்றே. (௧௨)

சத்துவமுற்றுமயக்குவதள்ளி
மெய்த்ததனைப்பெறவேறுகொடுத்தான்
பொய்த்துறுகுப்பைகிளைத்தொளிபொங்கு
முத்தையளித்தெனமுத்தைதனக்கு. (௧௩)

வீடுவிரும்பிவெறுத்திலன்மெய்யைத்
தாடருமொண்குரவன்றனையெங்கு
நாடியுழன்றிலனுனையவென்னைத்
தேடியடைந்தருள்செய்தனையென்று. (௧௪)

அல்லமனென்னுமருட்குரவன்றாள்
புல்லிவணங்குபொற்கொடியன்னாள்
செல்லலகன்றுசிதம்பரமெய்தி
யெல்லையிலின்பொடிருந்தனளம்மா. (௧௫)

பன்னிரண்டாவது - முத்தாயியம்மைகதி முற்றிற்று.

ஆகத்திருவிருத்தம். (௧௩௪)

பதின்மூன்றாவது

சித்தராமையர்கதி.

பேரறிவன்ஞன்
சாரவிருந்த
வூரினுமில்லென்
ருரவிகழ்ந்தே. (க)

வேறு. ஒட்டராமனுளத்தினி
லிட்டம்யாதுகொலித்தொழின்
முட்டிலாமன்முயன்றனன்
கொட்டிவீழுமிகுத்தல்போல். (உ)

விழற்கிறைப்பவிடுத்தல்போற்[மை
ரெழிற்குனெய்த்துறுதொழினு
யிழைக்கவிட்டதெனென்றிட
ரொழிக்கலுற்றவனேதினன். (௩)

சாந்தனேதியதாழ்மொழி
காய்ந்தவேலிருகாதினும்
போந்தபோன்றுபுகுந்தன
மாந்தராகுலமன்னினர். (௪)

அறமழித்தனையன்றியு
நெறியறக்குருநிந்தனை
பெறவுரைத்தனைபித்தவென்
றுறவுருத்தனரொட்டலர். (௫)

ஒட்டனென்றனையும்பருஞ்
சிட்டனென்றுகொள்சித்தனைத்
துட்டவென்றுசுளித்தனர்
வெட்டிருந்தடமேவினோர். (௬)

வேறு. மெய்த்தடமகழ்பவர்வினையையன்றியே
சித்தர்தஞ்செயலொருசிறிதுமின்மையான்
மத்தர்நுங்குரவனைமண்ணினும்மினு
மூத்தமவொட்டனென்றுரைத்துமென்றனன். (௭)

எனக்கறவினையுமிலென்றுகூறினு
யுனக்கொருகதியிலென்றுண்மைகூறியே
சினத்தனர்நிலனகழ்சிறியர்யாவருந்
தனக்கிணைதானெனுந்தம்பிரானையே. (௮)

முற்றியகல்வியின்மூடர்நீவிர்நங்
கற்றறிமூடனைக்கரைமினன்னவ
னுற்றனனெனிலவனுணர்வுஞ்சொல்லினு
லிற்றெனவுணர்வமென்றெர்தைகூறினுன். (கூ)

சேடனும்புகழ்வுறுஞ்சித்தராமனை
மூடனென்றுரைத்தவம்மொழிகயக்தொடத்
தோடருங்கொட்டினோர்சீற்றத்துப்பெறு
நீடுவெந்தழல்சொரிநெய்நிகர்த்ததால். (க
௦)

இறுக்கினரழுக்குடையெயிறுமென்றன
ருறுக்கினரதிர்த்தனருயிர்த்துமீசையை
முறுக்கினர்நகைத்தனர்முருட்டுக்கைகளாற்
பெறுக்கினர்சிலைகளைப்பெருஞ்சினத்தராய். (கக)

கட்டுமின்பிடிமினுங்கரத்திற்கொட்டினுல்
வெட்டுமினிர்தைசொல்வாயின்வெண்பலைத்
தட்டுமினெறிமின்வன்றலைகுமைந்திடக்
குட்டுமினெனவுளங்கொதித்துக்கூடினுர். (க௨)

என்மனவிருளறவெழுந்தவல்லமன்
மின்மலிவுறுதிருமேனிமீதிடச்
சொன்மலியொட்டலர்சூழ்ந்துகொண்டுவன்
கன்மழைசொரிந்தனர்கைசலிப்பவே. (கங)

சாக்கியனெறிதனிக்கலன்றிமெய்
நோக்கிலர்தாமொருநூறுகோடிகன்
மீக்கிளர்சோதிதன்மீதுவீசினுக்
தாக்குறுமோவவைதாக்குறுவரோ. (கங)

கொடியவரெறிந்தகல்குவியக்குன்றென
முடிமிசைநின்றனன் முத்தனல்லமன்
புடவியினுடனிழல்புதைப்பவந்நிழல்
கடிதினின்மிமிசைகாணுந்தன்மைபோல். (கரு)

ஒறுப்பவனிழிந்தவனொருவன்செய்தநோய்
பொறுப்பவனடுவுளன்பொறுக்குநெஞ்சமு
மறப்பவனுயர்ந்தவனென்றுவாய்மையாற்
சிறப்பவரிம்முறைசெப்புவாரரோ. (கசு)

திங்கினையெதிர்நின்றுசெய்தபோதினே
தாங்கிலன்முனிவினைமறந்துதாமரைத்
தேங்கமழ்மலரெனமுகஞ்சிறப்புறீஇ
யீங்குநின்றிடுமிவன்யாண்டுளான்கொலோ. (கஎ)
குறுகலுமவன்பலகோலங்கொண்டன
ணிறைபுனற்கடந்தொறுநிலவுதோன்றல்போன்
மறுகினர்நிலனகழ்மணிதர்பற்றுதற்
கறிகிலரினையனென்றனையன்றன்னையே. (கஎ)

யாந்தொழில்செயுமிடத்தேதுவின்றியே
போந்தனனொருமகன்புதியனின்புக
ழோர்ந்திலனுரைக்கொணுவிழிபுரைத்தனன்
மாய்ந்திலமுடனசைமருவியாங்களே. (கஅ)

யாவனென்றன்னையின்றிகழ்ந்துளானவ
னுவரிந்திடுவேனெனவெழுந்தனன்
மேவுறுந்தவமதவெகுளிதானினி
யோவுறுந்தரத்ததன்றொருவராலுமே. (ககூ)

வேறு. அகழ்கின்றார்தமைத்தாங்குறுமகனிலமென்ன
விகழ்கின்றார்தமைப்பொறுக்குமித்தன்மையெய்தலினு
னிகழ்கின்றாருண்மாதவமுடையோகிநீயென்று
புகழ்கின்றனெனவிகழ்ந்தனன்பின்னரும்புகல்வான். (உ௦)

சிறப்புப்பெற்றநல்யோகிதன்மனத்தெழுசினந்த
னறத்தைக்கொன்றிடுமுன்புபஞ்சியிற்புகுமழல்போ
லொறுக்கப்பட்டவன்பவம்பினையொழித்திடுமதனாற்
பொறுத்தற்கொப்பிலையென்றுநன்றறிந்தனைபோலும். (உக)

கால்னின்முனம்பொறையுளனுகுவன்கடல்சே
ராலநல்லமுதாகுமென்றவன்றவம்புகழ்வான்
போலவைதனன்கொடியவனெனும்பொருடோன்றச்
சீலநல்குமோர்தொழில்செயுமல்லமதேவன், (உஉ)

பொறையுறும்படியல்லமன்சூட்சியிற்புகலக்
குறையுறுஞ்சினமிகுந்தனனெருப்பெனக்கொதித்தே
யறையுறுந்திரள்பந்தெனச்சித்தராமைய
னிறையுறுந்திருவருளுடைப்பிரானெடுநிகழ்த்தும். (உ௩)

குறிப்பில்வைதனைவெளிப்படையிகழ்வினுங்கொடிதாய்
வெறுப்புமுன்செயாவென்னைநீயீண்டிகழ்ந்தமையாற்
பொறுப்பனல்லன்யானுதல்விழித்தியிடைப்பொடிப்ப
வறுப்பனென்றனனிகழ்வினுக்காருளமறுகார். (உ௪)

தன்னைக்கொல்லினுந்தான்பிறிதொன்றினைக்கோறல்
பன்னிற்பாவமென்றறைகுவர்கற்றுணர்பழையோர்
நின்னைச்சொல்லியவறத்தினைநிந்தையென்றெண்ணி
யென்னைக்கொல்லுவனென்றநீயறவனேயென்று, (உ௫)

சாதனங்களுணீறுமுந்தியதென்பர்சாற்று
மாதவங்களுளுயிர்செகாமையுமற்றுமதிப்பிற்
பாதகங்களிற்கொலைசிறந்தன்றெனப்பார்த்து
நீதெரிந்திலையரக்கனேயென்றனனிமலன். (௨௬)

செருக்கொழிந்திலையென்னெதிர்செவிசுடுதீச்சொ
லுரைத்துநின்றனையுனைவிடுகிலனெனவுருத்து
நெருப்பெனுந்திருநுதல்விழிதிறந்தனனினைத்து
மரிப்பினுந்தருவேனுயிறென்றிராமன்றான். (௨௭)

நெற்றித்திவிழிக்காமனைநீற்றுவதன்றிப்
பற்றிக்காமமில்யோகியைப்படுத்திடவற்றோ
செற்றத்தானுதல்விழியழலல்லமதேவன்
வெற்றித்தாண்மலர்க்கீழ்ச்சென்றுபணிந்ததுவிரைந்து. (௨௮)

பணிந்துமீளுமவ்வழலொருவீரன்மேற்பாயத்
துணிந்துபோயவனாற்றல்கண்டேளவலிதொலைந்து
தணிந்துபேடிமேற்செல்லுமாறலைவனசரன்போ
லணைந்திராமன்வாழ்நகரினிற்பற்றியதன்றே. (௨௯)

அணியெரிந்தனமென்றுகிலெரிந்தனவாரத்
துணியெரிந்தனகலவைகளெரிந்தனசுதைபின்
பணியெரிந்தனமனைவளமெரிந்தனபகரு
மணியெரிந்தனவெரிந்தனகண்டவர்வயிறு, (௩௦)

சேயெடுப்பவர்விருத்தரையீர்ப்பவர்சேமம்
போயெடுப்பவர்புகவரிதாகிமண்புரண்டு
வாயடிப்பவர்மனையெரியவிப்பவர்மறுகிப்
பாயலைக்கடலெனவழுதிரங்கினர்பதைத்து. (௩௧)

ஒருத்தன்வந்தவாருக்கியபொற்பணியொன்றைத்
திருத்தவல்லவனழித்ததைச்சிறந்திடச்செயல்போற்
புரத்தைநன்றுறவல்லமன்புரிதலும்புரத்தோர்
கருத்தில்வந்தெழுந்தோங்கியதார்வமாகடலே. (௩௨)

வேறு என்னொருநுதல்விழித்தியவன்றனையிறைஞ்சலாலே
தன்னருளதனாலென்னைத்தடுத்துவந்தாளவேண்டிப்
பொன்னவிர்சுணங்குபூத்தபுணர்முலைமடந்தைபாக
னிந்நிலவரைப்பிற்கோலமிதுகொடுவந்தானென்று. (௩௩)

நீயனேனறிவிலாமற்செய்பிழைபொறுத்தாட்கோடி
பேயனானொருவன்செய்தபிழையினையவனையீன்ற
தாயலாற்பொறுப்பார்யாவர்தானுவேயென்றிராமன்
போயெனாரமுதின்செந்தாட்போதினைப்பற்றிவீழ்ந்தான். (௩௪)

செய்யதாண்மலரின்வீழ்ந்தசித்தனையருளானோக்கி
ஐயநீயெழுகநெஞ்சிலஞ்சலையென்றுகூறிக்
கையினாலெடுத்தணைத்துக்கல்வியுக்தவமுமாய்க்கும்
வெய்யதாம்வெகுளிதன்னைவிட்டிடென்றெந்தைசொல்வான். (௩௫)

வலியவனிடத்துமொத்தான்மாட்டினும்வெகுளிகாத்தல்
பொலிவுசெயறமதென்னப்பொருந்துறுதனையர்தம்பா
னலிவுறுவெகுளிசெல்லாதாதலானலியலாற்கு
மெலியவனிடத்திற்காக்கும்வெகுளியேயறமதென்பர் (௩௭)

வைதவன்றன்னைநன்றுவாழ்த்தினனெனவுந்தீய
செய்தவன்றன்னைநல்லசெய்தவனெனவுங்கொள்வோன்
கைதவமகன்றமுத்திகண்டவனவ்வாறுன்னான்
பொய்தவனென்பதென்றுபுகன்றனர்புலவரன்றே. (௩௮)

பெரியவர்தம்மைக்காய்ந்தான்பிறங்கல்கல்லியகோலொப்பான்
புரிவனபுரியப்பட்டுப்புலம்புவனுைத்தார்க்காய்ந்தா
னெரிநரகதனில்வீழ்வனிழிந்தவர்க்காய்ந்தானென்ற
லொருவர்தம்மிடத்துஞ்சிற்றமுறுமையேநன்றுமாதோ. (௩௯)

யாவர்க்குமொப்பநன்றுமென்னினுஞ்சினமிலாமை
மூவர்க்குமரியசெய்யுமுனிவர்க்குஞ்சிறந்ததென்று
தேவர்க்குமரியவின்பஞ்சித்தராமப்பேரண்ணன்
மேவற்குவடிவங்கொண்டுமேவியவிமலன்சொன்னான். (௪0)

அல்லமனறைந்தமாற்றமறிந்துநஞ்சித்தராமன்
சொல்லுவன்முத்தியெய்துந்துணையசாதனங்களெல்லா
மில்லையென்னிடத்திலேனுமென்னைநீவலிந்தாட்கொள்ள
நல்லவனாகச்செய்தநன்மையேநன்மையென்று. (௪௧)

அடன்மலிவீரன்வீரமவனெதிர்மலைந்துநின்றோன்
படைமிசைகொண்டுகாணப்படுமதுபோலவுன்றன்
கடன்மலியருளினாற்றல்கண்டிடப்படுமிங்கென்றன்
கொடுமையின்மிகையாலென்றுகுடந்தம்பட்டமுங்கிக்கூறி. (௪௨)

பருவமுற்றிலர்க்குமுக்கட்பகவனாகமத்தினுண்மைப்
பெருமையைப்பொருளையெண்ணிப்பெருமிதத்துரைப்பிலன்னான்
குரவரிற்பதடியென்பகுறித்துநற்பருவநோக்கி
யருள்செயிற்குரவசிங்கமவனெனுவறைவனையன். (௪௩)

உரைசெயிற்பரமஞானமொன்றுமேமுத்திக்கேது
சரிதைநற்கிரியையோகந்தாமொருமூன்றுஞான
மருவுதற்கேதுவென்றுமறைபுகன்றுரைக்குமிந்தக்
கருவியைப்பொருளென்றெண்ணிக்களிப்பவர்கயவரன்றே. (௪௪)

கருமமும்யோகந்தானுங்கரணத்தைப்புனிதமாக்கிப்
பொருமிடர்வாயிற்றேறும்புக்குழல்கறங்குபோலத்
தெருமராதுண்ணிறுத்துந்தெளிந்தவக்கரணந்தன்றை
னிருமலனாகுமீசனித்தனென்றுணர்வுதிக்கும். (௪௫)

நித்தியனிமலனென்னுநினைவுமினனித்தமாகிப்
பொய்த்தழியுடம்புடம்பைப்பொருந்தியபொருள்வெறுத்து
மெய்த்தருள்குவரன்றன்னைவிரும்பினன்சென்றுசார்ந்து
தத்துவமுதறிந்தின்றதனியறிவினையேகாணும். (௪௬)

புலன்களையொழித்தபோதேபொறிகளும்பூதமைந்துங்
கலங்குறுகரணநான்குங்கலாதியுஞ்சுத்தமைந்தும்
விலங்குறுமடியில்வைத்தவெறுங்குடந்தள்ளின்மேன்மேன்
மலங்குறவொருங்கடுக்குமட்கலம்விழுதலேபோல். (௪௭)

இந்தியமோரொன்றாய்விட்டிடின்மற்றையொன்றுசாரு
முந்தியமனமழிப்பமுற்றும்போமணியபாம்பி
னைந்தலைகளினுளொன்றையரிந்திடின்மற்றொன்றாலஞ்
சிந்திடமிடறரிந்தாற்றீர்ந்திடுமொருங்குமாதோ. (௪௮)

சித்தராமையர்கதி முற்றிற்று.

ஆகத் திருவிருத்தம்-௧௮௨.

பதினான்காவது

வசவண்ணர்கதி.

முக்கணாயகன்புகழெனுமூரலுண்பதற்குத்
தக்கதிஞ்சுவைக்கறியெனச்சமைந்ததுவசவன்
மிக்கவான்புகழவற்றினைமாதவர்விரவித்
துய்க்குநாவினிற்றுய்த்தனர்பவப்பசிதொலைய. (௧)

விலக்குமுற்பவச்சித்தராமற்குமுன்விளம்பு
மிலக்கணத்தினுக்கருணந்தியெனுமிலக்கியத்தைக்
கலக்கமற்றறிந்திடுவதற்குதாரணங்காட்ட
மலக்கமற்றநம்மல்லமன்றிருவுளம்வலித்தான். (௨)

செஞ்சரணிறைஞ்சிநல்குஞ்செழுந்துகில்கிழித்துக்கீள்கொண்
டெஞ்சியமிகையென்றெண்ணியிட்டவணகன்றுபோவா
ரஞ்சுடர்மணிப்பசும்பொன்னணிதுகிலலங்கல்சாந்தம்
வஞ்சியர்தமக்களிப்பத்தருகெனவாங்கிச்செல்வார். (௩)

என்றவனியம்பநந்தியெனும்பெயர்க்கருணைக்குன்றங்
கன்றினைநினைந்துநெஞ்சங்கரைந்துவந்தணையுந்தாய்க்கிங்
கொன்றொருதடையுமுண்டோவொல்லைநீதருதியென்னச்
சென்றவனமலனோடுசித்தராமனைவணங்கி, (௪)

பரசிவலிங்கபூசைபண்ணியபயனேயுங்கள்
வரவெனவுளமகிழ்ந்தான்வசவனீர்வருகவென்ன
வெருவொடுமுளமுளைந்துமெய்த்தவன்விளம்பவெங்கள்
குருபரன்முனிவான்போலக்குறுநகைகொண்டுகூறும். (௫)

அரசியலடைந்தார்தம்பாலையமேற்றருந்துகின்றோர்
வருசெயல்வரிசையன்றுமறிந்துநீபோதியென்று
வுரைசெயவமலனப்பனுளம்வெரீஇக்கடிதுமீண்டு
வரைசெயும்வயிரத்திண்டோள்வசவநாயகற்குச்சொன்னான். (௬)

அல்லமன்புகன்றமாற்றமப்பணன்சென்றுநின்று
சொல்லலுந்துணுக்கென்றுள்ளஞ்சொற்றளர்ந்துடல்வியர்த்துப்
புல்லவந்தணையுந்தாய்முன்பொருதுதும்பறுத்திட்டோடு
நல்லிளங்கன்றுபோன்முன்னுன்செலாதிருந்தேனென்று. (௭)

கரைந்துகுமனமுளைந்துகவலைகொண்டழுங்கநந்தி
பெருந்தகைமாச்சிதேவன்பெருங்கடற்பிறந்தசாவா
மருந்துதன்னெதிர்கிடைத்துமற்றதைவாரிக்கையா
லருந்துறவலசுவான்போலாயினைநீயுமென்றான். (அ)

பெருந்தகைமாச்சிதேவன்பேசுசொல்விளக்குத்தூண்டுந்
துரும்பெனவுதவச்செம்பொற்றாணெனுந்தோளான்மாழ்கி
யிருந்தவப்பிழையென்மேற்றேயென்றடியிறைஞ்சியொய்யென்
றருந்தவரொடுபுறப்பட்டல்லமனருகுவர்தான். (கூ)

என்குணமறமேயாகியானதிற்றிரிதலில்லே
னின்குணமருளேயென்றானியதினிற்றியெந்தாய்
புன்குணமகவின்றீமைபொறுத்தருள்செய்கையென்னுந்
தன்குணம்விடுத்தொழிக்குந்தாய்வியனுலகிலுண்டோ. (க0)

சூத்திரப்பாவையானச்சூத்திரிநீயருட்கண்
பார்த்தெனைக்குறையகற்றிப்பணிசெயக்கோடியென்று
வாய்த்தநற்குரவன்செந்தாமரையடிமிசைவிழுந்தா
னேத்திமெய்ப்பத்திநீத்தமெனப்படும்வசவதேவன். (கக)

நிலமகள்பொறுதுதள்ளினிறுத்துனர்யாவரோதை
மலிகடல்புரளுமாயின்மறிப்பவருளரோவெங்க
டலைவநீமுனிவையாயிற்றடுப்பவருலகில்யாண்டு
மிலையிலையருள்செயெந்தாயெனச்சென்னவசவன்றாழ்ந்தான். (கஉ)

சொற்றிடுங்குதலைச்சொல்லிற்சொற்றிறந்தெரிதல்போலச்
சிற்றிளங்குமரனன்புசெயவடியிடுமுன்னேக்கேல்
சற்றுநின்கடைக்கண்வைத்துத்தண்ணளிபுரிகவென்று
நற்றவமாச்சிதேவனங்குரவனைப்பணிந்தான். (கங)

உரைமனமெய்யொருங்கியுன்பணிசெய்யவல்லோன்
றரைமிசையிவனலாதுதாஞெருவரையுங்காஞே
மருள்செயவேண்டுமென்னவல்லமனடிபணிந்தான்
கிரிமகள்கொழுனற்கன்பன்கின்னரப்பிரமனம்மா. (கச)

எமையெலாமடிமைவேண்டினிவன்பிழைபொறுத்தியென்ஞு
வமையுலாம்பணைமென்ருேட்சேயரிமதர்மழைக்கட்செவ்வா
யுமைமணுளனையுவந்தவொண்டவரெலாம்பணிந்தார்
சமையுளாருணருமெங்கடம்பிரான்சாற்றலுற்ருன். (கரு)

சொல்லியசொற்கள்கற்றீர்சொற்றவங்நெறியினிற்கு
நல்லியலில்லைநும்பானவிறருமாற்றமொன்று
புல்லியசெயலொன்ருகப்பொருந்துனர்தம்மிலார்க்கும்
பல்லியமொடுநெடிக்கும்பரதரேபெரியராவார். (கசு)

ஆதரவிலையேல்வேண்டுமறத்தினிற்பொருளோர்செம்பொற்
பூதரவளவளித்தும்பொருளழிவளவேயாகு
மாதரவுளதேனல்கும்பொருளணுவளவென்ருலும்
பூதரமெனவளர்ந்துபுண்ணியப்பொருளளிக்கும். (களஎ)

துறவறமனையறஞ்சேர்தூய்மைநற்கல்விநல்லோ
ருறவொடுமெகங்கடானமொண்டவம்விரதம்பூசை
யறிவிவையனைத்துமில்லையாதரவில்லையாயிற்
பெறுவனமெய்வருத்தம்பெரும்பொருளழிவுமாதோ. (கஅ)

ஆதரவுடையான்செய்யுமல்லவுநல்லவாகு
மாதரவிலாதான்செய்யுநல்லவுமல்லவாகு
மாதரவதனுலாவிக்கருந்துணையின்பமுத்தி
யாதரவலாதுவேறென்றளித்திடக்கண்டதுண்டோ. (ககூ)

ஆதலாலன்பினுஞ்சொல்லகமகிழ்வினைச்செயாவென்
றோதினனடியர்தீமையொழித்தருடொழிலினின்றோன்
காதலால்வணங்கினோர்நின்கருணையாலன்றியாங்க
ளேதினனல்லராவேமென்றடிதொழுதுநின்றார். (உ0)

காஞ்சிரங்கனிதின்றுங்குக்கடையனேன்பிழைபொறுத்தாய்
தீஞ்சுவையமிர்தமன்னதிவ்வியகறியிற்குற்ற
மாஞ்சுவையறைதல்போலிவ்வன்பனைச்சீறேலென்று
பூஞ்சரண்மிசைவணங்கிப்போற்றினன்சித்தராமன். (உக)

அடைக்கலமென்னையாளாயண்ணலேயென்றுநந்தி
கடிக்கமலங்கள்வென்றகான்மிசைமீண்டுந்தாழ்ந்தான்
விடுத்திடேலென்றுசென்னவசவனும்வீழ்ந்திறைஞ்சித்
தொடிக்கரந்தொழுதானன்பர்துதித்தனர்சூழ்ந்துகொண்டு. (உஉ)

அல்லமனெனுமெங்கோமானருட்கடைக்கண்வைத்தைய
சொல்லுவனெழுதியென்றுதுணைக்கையாலெடுத்தணைத்து
நல்லருள்புரிந்துதண்டநாயகன்றிருமடத்து
ளெல்லையிலடியர்சூழவினிதெழுந்தருளினானால். (உ௩)

வசவண்ணர்கதி முற்றிற்று.

ஆகத் திருவிருத்தம் உ௭௫

பதினைந்தாவது

மருளசங்கர தேவர்கதி.

குண்டமேவுறுபிரசாதங்கொள்ளைகொண்
டுண்டுவாழ்மாதவனுண்மைத்தன்மையைத்
தண்டநாயகன்முதற்சரணர்யாவரும்
கண்டிலர்யாரினிக்காணவல்லவர். (க)

சரிதையொண்கிரியைகாறடுக்கும்யோகிவை
புரிபவர்தம்மையப்புரியுஞ்செய்கையாற்
றெரிதரலாகுமோர்செயலுமின்றிவா
ழரியநன்ஞானியையறியலாகுமோ. (௨)

நலமுறுமோர்சிவஞானியில்லில்வாழ்
நிலையறமாகினுநீத்துநிற்குமோர்
தலையறமாகினுந்தரித்துஞாலமே
லிலைமறைகாயெனவிருக்குமென்பவே (௩)

வல்லனென்றிருப்பினுமிருக்கும்வன்மையொன்
றில்லனென்றிருப்பினுமிருக்குமெள்ளுறப்
புல்லனென்றிருப்பினுமிருக்கும்புண்ணிய
நல்லனென்றிருப்பினுமிருக்குஞானியே. (௪)

அறிவறிஞானியாலன்றிவன்பவ
மறிவுறுகருமியான்மாய்வுறுநகா
ணெறிகதிரிரவிவந்தெழுந்திடாவிடிற்
செறியிருளகலுமோசித்தராமனே. (௫)

சங்கரமுனிநிலைதனைக்கண்டாய்கொலென்
றெங்குருபரன்சொலவிராமன்கைதொழு
திங்கிவன்மருளரிலிருந்ததன்மையென்
னங்கணவறைகெனவறைதன்மேயினன். (௬)

தொழிலான்முயன்றுநுகர்வமெனிற்றுயரொன்றுயிர்க்குவிளையுமென
வொழியாவமலசரமூர்த்தியுண்டமிச்சினுகர்வமெனிற்
பழியாதுமிலையகன்றுபோம்பவமுமென்னப்பிரசாதக்
குழியானதனையகலாமற்கொண்டிங்கிருந்தான்குணமிக்கான். (௭)

பந்தமகன்றசிவபத்தர்பாதம்விளக்கும்புனற்குழியில்
வந்துபிறந்துழலுழ்கிய தில்வைகும்புழுவின்பெரும்பேறு
முந்துகங்கைமுதலவாமுற்றும்படிந்துதீவினைகள்
சிந்துமந்தணாளருமேசேராரென்றுமறைசாற்றும். (அ)

தாய்க்குவழுவின்மகளிர்க்குத்தந்தைதனக்குப்பசுவிற்குச்
சேய்க்குமறையோர்தமக்கிடர்செய்திர்வில்கொடியபாதகமும்
போக்குமிமைப்பிற்கரணத்தைபுனிதமாக்கிச்சிவமாக
வாக்குமரன்றன்பிரசாதமாயினதற்குநிகருண்டோ. (௯)

பசிக்குமருந்துமாய்வீடுபயக்கும்வண்மைசேர்ந்துபவ
மொசிக்குமரன்றன்பிரசாதவூதியந்தானுணர்ந்திங்கு
வசிக்குந்தகைமைசங்கரற்கேவருவதன்றிப்பசிக்குணவு
புசிக்குமனிதர்தமக்கென்றும்பொருந்தாதென்றானெம்பிரான் (௧0)

நின்னையறிவன்சங்கரனேநீயேயவனையறிகுவாய்
பின்னையுலகில்யாரறிவார்பேசிற்பாம்பேபாம்பின்கா
றன்னையறியுமெனவமலன்றாட்டாமரையின்கீழ்ப்பணிந்தா
னென்னையடிமையாவுடையவிராமனென்னுமிணையில்லான். (௧௧)

வெம்மையெதன்கணிகழ்ந்திடினும்வெந்தீக்குணமென்பதுபோல
மும்மையுலகின்யாண்டேனுமுளைக்கிற்பத்தியதைநினதென்
றிம்மையுலகமியம்புமெனிலெங்கள்வசவநின்பெருமை
கொம்மையிளமென்முலைமடந்தைகூறனன்றியாரறிவார். (௧௨)

பத்திக்கடலேகுணக்குன்றேபாசப்பகையேயெம்முறவே
முத்திக்கரசேசிவானந்தமுதலேஞானமணிவிளக்கே
சித்திப்பொருளேயருணத்திதேவேநின்னைத்தொழுமடியார்
புத்திக்கமுதேயாவர்நினைப்போல்வாரவரையறியேமால், (௧௩)

என்றுகூறவெமையுடையானெனக்குப்புகன்றநலமெல்லாஞ்
சென்றநாளிலிலைகின துசெந்தாமரைத்தாடொழப்பெற்ற
வின்றுதொடங்கியுளவாமென்றெந்தைநந்திவணங்கியெழ
நின்றவமலசிவசரணர்நெஞ்சமுவகைபூத்தனரால். (கசு)

மருளசங்கரதேவர்கதி முற்றிற்று.

ஆகத்திருவிருத்தம்-உ௱௯௧

திபனுறுவது
இஷ்டலிங்ககதி.

அடியனேன்சிவபத்தியறிந்தமை
படியிலூமன்கனவெனப்பட்டது
முடியுமாறுமொழிந்தருளென்றுபொற்
றொடியுலாங்கைதொழுதுவிளம்பினன். (க)

கேட்டவாரியன்கேடில்சிவநெறிக்
கூட்டமேவுறுகொள்கையினுய்நினைக்
காட்டுவோருளரோசெங்கதிர்க்கிரு
ளோட்டுசோதியுமுண்டுகொலோவென்றான். (உ)

வள்ளலின்றெனவந்துபுகழ்ந்தனன்
றெள்ளுதண்புனற்றேக்குமுளைத்தலை
கிள்ளிநின்றெறிகின்றவர்போலெனு
வுள்ளுடைந்திட்டுரைக்கும்வசவனே. (௩)

வேறு. இகழ்ந்தெனதுளச்செருக்கினையகற்றிலாய்
புகழ்ந்தனைவிழைபுளிங்கறியிட்டாறுநோய்
மிகுந்தெழவளர்த்தல்போலெனவிளம்புபு
தகுங்கழலிறைஞ்சினன்றண்டநாயகன். (சு)

புன்மரநெளிபுழுப்புள்விலங்கெனும்
பன்மைய துயர்செயும்பவங்கடப்பியே
வன்மைகொணிலமிசைமக்களாகுத
னன்மைகொளுயிர்க்கலாலரிதுநந்தியே. (ரு)

நரர்வடிவாயினுநன்மையாற்றுறு
மரபினிலுலகினில்வருதறப்புத
லரிதுநல்லறம்புரிவழியடுப்பினு
மருவுதலரிதறம்வளர்க்குமங்கமே. (சு)

அறத்துறுப்பெய்தினுமன்பினாலறஞ்
சிறப்புறச்செய்தலிங்கரிதுசெய்யினும்
புறச்சமயங்களைப்போக்கியாகம
நெறிச்சமயங்களையரிதுநேர்தலே. (எ)

ஆகமம்புகனெறியடைவனாயினுஞ்
சோகமில்சைவநற்றுறையைநன்றெனச்
சேர்குதலரிததுசேர்வனாயினு
மேகலிங்கயிக்யனாகுதலன்றெண்மையே. (அ)

பொருவில்சற்பத்தியாந்தாரம்பூண்டொரு
வரவயிராகமாம்வத்திரம்புனைந்
தொருவலினுணர்வெனுஞ்செச்சையொன்றுறப்
பரமனையிருத்துவோன்பத்தனாகுவான். (கூ)

அருளெனும்புனலினையாட்டிச்சாந்தமாம்
வரைநறுஞ்சந்தொமேருவவித்திய
விரைமலர்புனைந்தறிவினையருத்துறிற்
பரமனையவன்சிவபத்தனாகுவான் (கo)

ஆசறுமனத்தெழுமன்பையன்றியே
பூசனையுவக்கிலன்புராரிசென்னிமேல்
வீசுறுதிரையினுமிக்கதோசொலா
யூசல்செய்மனமுடையொருவனுட்டுநீர். (கக)

பூசனைசெயாதகைபுராந்தகன்புகழ்
பேசுதலிலாதவாய்பெற்றுழன்றிடு
நீசரானவர்தமினெடுவனத்திடைக்
கூசுதலிலாதபுன்குரங்குநன்றரோ. (கஉ)

தானுறுமுடன்மனந்தனமென்றுள்ளவை
யீனமில்குருசிவசரங்கட்கீந்துதான்
யானெனதென்குதலின்றிவைகுவோன்
மேனிகழ்சிவமொடுவேறலானரோ. (கங)

குருசிவசரங்கொளக்கொடுத்தமெய்மனம்
பொருளிவைநமவெனப்புந்திசெய்துகொ
ளொருவனில்வழிமறித்தொறுத்துக்கொள்வன
சரனிநல்லன்மெய்தவறிலாமையால். (கச)

விள்ளருநற்சிவவேடத்தோர்பொருள்
கொள்ளைகொள்கிற்பினுங்குறைகள்கூறினும்
பிள்ளையையறுப்பினும்பிழைகள்செய்யினு
மெள்ளுதலிலனெனிலீசற்கன்பனும். (கரு)

சங்கமந்தனக்கொருசாதியுன்னினு
னங்கையினமர்தருமரற்குமுன்னினுன்
சங்கரனுடுசரந்தம்மில்வேறெனு
மங்கவனறிவருமளற்றழுங்குவான். (கசு)

ஈசனையிருத்துறுமிதயத்தோர்பொரு
ளாசையையிருத்துதலந்தணாளர்தாம்
வாசமுற்றிடுமொருமனையிற்புன்செய
னீசலரயிருத்துதனிகர்க்குமென்பரால். (கஎ)

சினமுதலியமயநீரமாற்றுபு
வினைதபுவாய்மையாமெழுக்கையன்பெனும்
புனலொடுவிரவியேபூசினல்லது
மனமெனுமனையிடைவராதிலிங்கமே. (கஅ)

காலமுங்கருமமுங்கடந்தகாரணன்
பாலுறும்பரிசறப்பார்மடந்தையர்
கோலமும்பொருளையுங்குறித்துநச்சுனர்
சீலமும்விரதமுந்தீயவென்பரால். (கக)

வெங்கொலைகளவுபொய்வெகுளியாசையென்
றிங்கிவையொடுமரீஇயிருக்கின்றார்தமக்
கங்கையினெல்லிபோலவிர்சடைப்பிரான்
செங்கையிலிருப்பினுஞ்சேயன்சேயனே. (உ0)

இஷ்டலிங்ககதிமுற்றிற்று.
ஆகத் திருவிருத்தம்-உ௱௯௰க

பதினேழாவது
கதலிவனகதி

நெஞ்சமாரழலரக்கெனநெக்குநெக்குருகச்
செஞ்சொல்வாய்தடுமாறவாள்விழிபுனல்சிந்தக்
கஞ்சநாண்மலர்க்கைதொழுதனங்கநோய்காணு
ளஞ்சினேன்பவப்பிணியினியருள்செயென்றழுதாள். (க)

வீடுவெப்பவராணெனப்பெண்ணெனவேரு
வேடலர்க்குழலுமைகலையேயிவளிவள்போ
னூடுறிற்பருவம்பெறுமவரிலைஞானங்
கூடுதற்குரியாளெனவல்லமன்குறித்தான். (உ)

பூதநீயலைபொறிகளுமலையலைபுந்தி
யேதுநீயலையிவற்றினைமயங்கியானென்னும்
போதநீயலையென்றிவையனைத்தையும்போக்கிச்
சோதியாகியபிரமமேநீயெனச்சொல்லி. (௩)

ஞேயஞானஞாதுருவெனுமிவைபலநிற்கு
மாயின்வேறறுமுத்தியன்றதுசகமாமென்
றேயுமாறிதுவதுவெனுஞ்சுட்டிலாவியல்பை
மாயைமாறியதேவிபாலருளினன்வள்ளல். (௪)

கதலிவனகதிமுற்றிற்று.
ஆகத்திருவிருத்தம்-௩ாசரு.

பதினெட்டாவது
சாதகாங்ககதி.

மனமிலிங்கமருவிலையேனுட
றனிலிலிங்கந்தரித்துமிலையிலை
யெனவியம்புமிணையிலியாகம
நினைவரன்கழனிற்கநிறுத்தினுய். (க)

தாவிலாதமனமொடுசார்தரா
தோவுமாயினுலகிற்புனலுமொண்
பூவுநாடொறும்போக்குறுபூசனை
யாவிபோகியவாகநிகர்க்குமால். (உ)

புறம்புகாண்குவன்புல்லியனீசனை
யறிந்தஞானியகமுறக்காண்பனு
லெறும்பிகாணுறிலின்கரும்பேகொளுஞ்
செறிந்தவாடிலை தின்பனவென்பவே. (௩)

கரங்கணல்லகரும ஞ்செயாகிற்பத்
திரிந்துசெல்லுஞ்செலாதவிடத்துநெஞ்
சொருங்குறுதவொருமனந்தன்னினும்
பரந்தவல்லற்படுக்கும்பகையிலை. (௪)

துயிலையின்பெனச்சொல்லுதலிந்தியத்
தியலுநெஞ்சமிலாமையினுலன்றே
பயிலுநெஞ்சம்பரந்துதிரிதருஞ்
செயலிலில்லைச்சிறிதுஞ்சுகமரோ. (௫)

மனமொருத்தன்வசப்படுமேலவன்
பினைவருத்தும்பிறப்பையடைக்கிடான்
மனமொருத்தன்வசப்படாதோடுமே
னணிபிறப்பிடைநாளுஞ்சுழலுமே. (௬)

அறவினைக்குமரும்பொருளின்பொடு
பெறுவதற்கும்பெருங்கல்விகற்றுயர்
விறலினுக்குநல்வீரந்தனக்குமொண்
டுறவினுக்குந்துணைமனமென்பவே. (௭)

நல்லசெய்துநரரையுயர்த்தவு
மல்லசெய்தங்களற்றிடையாழ்ப்பவும்
வல்லதிந்தமனமலதையனே
யில்லையென்னவியம்புமறையெலாம் (௮)

நெஞ்சமாதுமைநேசனைநண்ணுமேல்
விஞ்சுபாதகங்கோடிவிளைப்பினு
மஞ்சுருனவனவ்வினையாவையும்
பஞ்சுதியிடைப்பட்டெனமாயுமே. (௯)

மங்கண்மாநுடரென்றுமனத்தினுன்
மிக்கமேன்மைவிளங்கினரில்லெனிற்
பொக்கமேவும்பொறிகளோரைந்தினு
லொக்குமாவினையொத்துயர்வுற்றிடார். (௧௦)

கெடுக்கவல்லதுங்கெட்டவர்தங்களை
யெடுக்கவல்லதுமிம்மனமென்றதை
யடக்கவல்லவனையபவக்கடல்
கடக்கவல்லவனுவன்கடிதரோ. (௧௧)

ஆயின்மிக்கோரரியசெயலெலா
நேயமிக்கமனத்தைநிறுத்தல்காண்
வாயுநிற்கமனமுமுடனிற்குந்
தோயநிற்குறினிற்குந்திரும்புமே. (௧௨)

ஓடுமாவைநிறுத்துமினுள்ளுறக்
கோடும்வாய்க்கலினத்தினைக்கொள்ளுவார்
நீடுமாமனநிற்கநிறுத்துமி
லோடும்வாயுவையுள்ளுறவீர்ப்பரால். (௧௩)

ஓடும்பொன்னுமுறவும்பகையுமோர்
கேடுஞ்செல்வமுங்கீர்த்தியுநிந்தையும்
வீடுங்கானமும்வேறறநோக்குதல்
கூடுந்தன்மைகொளுமனநன்மனம். (௧௪)

மன்னுகாமவெகுளிமயக்கமென்
றின்னகூடியெறிவளிமுற்சுட
ரென்னவாடுமியன்மனந்நீமனந்
தன்னையாருந்தடுக்கத்தகாதரோ. (கரு)

நின்னைநோக்கவுநின்னையிறைஞ்சவு
நின்னைவாழ்த்தவுநின்மொழிகேட்கவு
மென்னமாதவமெய்தினவோவெனப்
பன்னிநாதற்பணிந்தனனந்தியே. (கசு)

சாதகாங்ககதிமுற்றிற்று.
ஆகத்திருவிருத்தம்-கூாருக.

பத்தொன்பதாவது
கோரக்கர் கதி.

கன்றின்வாய்முலைநெகிழ்த்துக்கறவைவிட்டகன்றதென்னச்
சென்றனனையனென்றுதிசைதொறுநோக்கிமாழ்கி
வன்றழலிழுதுபோலமனமுகக்கண்ணீர்மல்கி
நின்றனர்வசவணதிநிகரில்சற்பத்தரெல்லாம். (க)

காணுதலொழிகநல்லார்க்காணினங்கவர்பானட்புப்
பேணுதலொழிகபேணிற்பிரிவுறலொழிகவுற்றான்
மாணுயிருடம்பில்வாழும்வாழ்க்கைபோயொழிகவென்றூ
ஞணிடுமொருதாய்நீத்தபார்ப்பெனவுளங்குலைந்தார். (உ)

பொன்னற்குன்றெழுவாயாகப்பொருப்பளவிறந்தநிற்பச்
சென்னிக்கட்டவழ்வெண்டிங்கட்சிலாதரன்குழவிவெற்புத்
தன்னைக்கண்டவரையென்ஞோர்தலைமிசையேற்றுமென்னென்
றின்னற்கட்படிந்தன்ருேவவ்விறைமலைவிளர்த்ததம்மா, (ங)

வேறு. இரவிவானவனெழுந்ததுமின்றெனக்கதான்று
தெரிவவாயினகண்களுமின்றுநின்சிறந்த
வரவுநானெதிரின்றுபெற்றமையினின்வரவு
பொருவின்மாதவம்புரிந்திடார்க்கெளியதோபுகலின். (௪)

மதலையாகியநற்குணஞ்சார்ந்துநல்வாய்மை
சிதைவிலாவடியாரினஞ்சேர்ந்திடாதவன்கண்
ணுதலிஞானமுஞ்சேர்ந்திடானென்பவெந்நாலு
முதலிலான்பெறுமூதியம்யாதுகொண்மொழியில் (௫)

உடம்புவாழ்தருஞ்வாழ்தலுமண்பொதிந்தியற்று
முடம்புசாதரான்சாதலுமாகவேயுரைத்தா
யுடம்புதானுயிரென்னநீயுன்னினைபோலு
முடம்புவேறறியாவுலகாயுதனெனத்து. (௬)

யானினைத்தனனோடினனென்றியம்புதலாற்
றானெனப்படுகின்றதேதெனக்கதுதன்னை
நீநிகழ்த்துகவென்றுகோரக்கனின்றியம்ப
ஞானநற்குருபரனிதுநவின்றனனயந்து. (௭)

நானினைந்தனனெனக்கரணத்தினைகண்ணு
மானதன்மையாலுடல்பொறிகரணங்களனைத்து
நானெனும்படிவருமவரத்தான்பலவதனு
னீகவின்றதத்தியாசமென்றறிகெனநிகழ்த்த. (௮)

மருந்துகொண்டுநோய்தீர்ப்பவர்போற்சிவமருவி
யிருந்தவிவ்வுடம்பினைப்பெரியவர்விடவெண்ண
மருந்துகொண்டுநோயொடுறமதிப்பவன்போல
விருந்தவிவ்வுடம்பொழிறவெண்ணினையென்னே. (௯)

பிறந்தவாகமொன்றிறந்திடாப்பெருமையுமுடைத்தோ
வெறிந்தவான்சிலைவீழ்ந்திடாதிருப்பதிங்கில்லை
செறிந்தகாரியமென்பதென்ருயினுஞ்சிதையு
மிறந்திடாதுகாரணமெனப்படுமெதேயென்றும். (கo)

மருந்தினுலுடனித்தமாமென்றுநீவகுத்த
திருந்துவாழுநாட்பன்மைகொண்டன்றிவேறில்லை
பொருந்திநீயுடலழிந்திடாதென்பதுபொருந்தா
தருந்தவாவினிவீடுவேண்டென்றனனையன். (கக)

ஏதுசொல்லினுமென்னுடலழிவுறுதென்றும்
வாதுசெய்வதென்காட்சியாலுணர்த்துவன்வலியின்
ருதினாதனதருளினுலென்றுகோரக்கன்
றீதிலாவருள்வாரியோடுரைத்திதுசெய்யும். (கஉ)

அத்தவீச்சிறகன்னதோர்தோலறுமேனுஞ்
சித்தனுனலேனென்றுமுன்னின்றனன்செருக்கி
நித்தன்யானிவன்கருதியதேசெய்துநெஞ்சின்
வைத்தமாதருக்கொழிப்பலென்றருளுளம்வலித்தான். (கங)

இன்னவாறெலியெழவுடனூறின்றியிருப்ப
முன்னமேவியசெருக்கினுமும்மடங்கெய்தி
யென்னைநேர்பவரிலையெனவவனுளத்தெண்ணித்
தன்னையேநனிவியந்தமையறிந்தனன்றலைவன். (கச)

செய்தபிழைபோகவினிப்பிழைசெய்யாதடம்புகைசைதீர்ந்துநின்றன்
மெய்தெரியினெனக்குநீயினியனெனப்பெருங்கருணைவெள்ளங்கூற
வுய்தலிலென்பிழைபொறுத்திட்டடித்தரியவானமுதமூட்டுகின்ருய்
கைதருசெம்மணியனையாயான்செய்வதேதுளதுகைம்மாறென்று. ()

பிறந்தபயன்பெறவுலகரெனைக்கண்டுகொண்டுமெனம்பிறழ்தலின்றிச், சிறந்தசிவலிங்கமலர்க்கரங்கொண்டுபூசனைதாஞ்செய்யவேண்டி, நிறைந்தவெனதுருவாகுமிக்குறிகைக்கொண்டனன்யா னீங்காதென்று, மறிந்துதெளிகுதிமனமென்றருள்செய்தெங்குருதேவ னறையலுற்றான் (கசு)

என்றுனதியலுணர்த்தியுடம்புநானென்றிருந்தவியல்புபோல
நின்றவெனையுணர்ந்துநீசோகம்பாவனைகொண்டுநிற்பையாயிற் [சை
பொன்றலுறுவிடங்களுழன்றனைநினைப்பப்போதல்போற் போம விச்
நன்றறிதியெனவறிவித்தனனெங்கோன்கோரக்கநாதன்றன்னை (கஎ)

ஞானகுருபரனருளாற்றனக்குரைத்தமொழிப்பொருளைநன்றறிந்திட்
டேனவடிவென்பதுவிட்டுண்மையலாவனைத்தையுநீத்துண்மைகண்டு
தானதனையடைந்துதானதுவென்னுமருளகன்றுதானேயாகி
வானவருமறிவரியபெரும்புகழ்க்கோரக்கனவண்மன்னினனால். ()

கோரக்கர்கதி முற்றிற்று.

ஆகத்திருவிருத்தம் - உாஎ௫எ.

இருபதாவது

முனிவரர்கதி.

வேறு. நல்லனதீயனநாடுருதுகொள்
வல்லழலெனவருண்மழையெனப்படு
மல்லமனெதிர்ந்தவாரறமுளாரற
மில்லவரெனுதறிவியற்றினனரோ. (க)

அன்பனாய்க்கண்ணிடந்தப்பும்வேடனுக்
கின்பமீகுதல்புகழ்க்கேற்றதன்றுநான்
வன்பனாய்த்திரியுமிம்மறவற்காப்பலென்
றென்பொலாமணிவனமிரங்கிற்றென்பவே. (உ)

மேவுதீவினையெலாம்விளிந்துதூயனாய்ப்
பாவியேனுய்வகைபகர்தியென்றனன்
மாவலால்வழங்குருவனத்தில்வேட்டுவன்
யாவர்தாமிறையருளெய்தினுய்ந்திடார். (ந)

ஞானங்கொண்டோனுஞ்சிவபத
மூனங்கொண்டகருமத்துறுவது
வானங்கொண்டுவளர்த்தல்புகையறு
மானங்கொண்டுவளர்த்தலையொக்குமால். (ச)

முனிவர்கதிமுற்றிற்று.

ஆகத்திருவிருத்தம்-உ௱அ௰க.

இருபத்தொன்றாவது
சூனியசிங்காதனகதி.

ஏட்டினைப்புதர்நீராற்றிலெதிர்கிழித்தேறவிட்டோன்
பாட்டுடைத்தலைவனன்பர்பலருநம்வசவன்றன்னை
நாட்டமுற்றடையுமாசானமக்குமாமென்றிருந்தார்
வீட்டினுக்கேற்றுஞ்சோதிவிருந்திற்குமுதவுருதோ. (க)

சூனியசிங்காதனகதிமுற்றிற்று.

ஆகத் திருவிருத்தம்-உ௱அ௰உ.

இருபத்திரண்டாவது,
சூனியசிங்காதனத்திலிருந்தகதி.

உடம்பொடுபொறிநாற்கரணமற்றுயிரென்றுரைத்திடப்படுமு பாதிகளைக், கடந்துளநிலையிற்சோதியாயிலங்கக்கண்டிடுதுரியனைப் போல, நெடுந்தவிசமையவமைத்தசெம்மணிப்பொன்னிலைகளோரே ழையுங்கடவா, விடந்தனிவிசும்பென்றல்லமனிருப்பவிருந்தவர்யா வருங்கண்டார். (க)

சூனியசிங்காதனத்திலிருந்தகதி.முற்றிற்று.

ஆகத் திருவிருத்தம்-உஅ௲ங.

இருபத்துமூன்றுவது
ஆரோகணகதி.

ஒருவருண்ணவொருவர்பசிகெடார்
தரையிலென்னுந்தகுமொழிபொய்த்திட
வருளினல்லமனுரும்பசிகெட
விரவியுண்டமிகுதிவிளம்புவாம். (க)

பூசனைத்தொழில்பூண்பதினெண்மடங்
கீசனைத்துதித்தேத்துதனன்றென
வூசலொத்தவுளமிலராய்ப்புலத்
தூசிநிற்பத்துதிப்பவரோர்சிலர். (உ)

பத்தியிற்றவறிஞேன்பாலிருந்துநாந்
துய்த்துடற்சுமப்பதிற்றுறத்தனன்றென
மெய்த்தவக்குழாமெலாம்வெகுண்டுபோயின
வத்தனற்றண்டநாயகனைவிட்டரோ. (ங)

இழிப்பினும்வெறுப்பினுமில்லினுள்ளன
வழிப்பினுமுடம்பினையரிந்துகொல்லினும்
பழிப்பறுசங்கமபத்திசெய்பவ
னொழுப்பதுபிறவியென்றுலகமோதுமே. (ச)

ஒருவன்யான்சிறுபசியுடையன்சிற்றுணு
விரைவுறவிடுதிநீவேண்டுமோறுபின்
பரிவுளவடியவர்பாற்செயென்றனன்
பொருவறுவசவனைநோக்கிப்போதகன். (ரு)

பின்னருமம்முறைபெய்யவையனவ்
வன்னமுமம்முறையருந்திப்பின்னரும்
பின்னருமம்முறைபெய்யவுண்டனன்
றன்னுளம்வியந்தனன்றண்டநாயகன். (சு)

வேறு. அளவறுமடியர்க்கெல்லாமாக்கியவடிசிற்குன்றங்
கொளவுறுகூடையோடுகூடைகடாக்கக்கொண்டு
வளமுறுகையிலைக்குன்றம்பெயர்த்திவண்வைத்ததென்னத்
தளவுறழடிசிலெங்கடம்பிரானெதிர்குவித்தார். (எ)

பருப்பொருபொருப்பெனத்தாம்படைத்தனர்சிலரெடுத்து
விரைப்புதுநெய்கவிழ்த்துவிடுத்தனர்சிலர்மணக்கும்
பொரிக்கறிபளிதம்பாகுபுளிங்கறிபலவுமெல்லா
நிரைத்தொருசிலர்சொரிந்துநின்றனர்முகில்கள்போல. (அ)

வடைபடுதிகிரியாகமாங்கனிகவண்கல்லாக
வுடைபடுகழைக்கரும்பங்கொண்கதையாகக்கொண்டு
கடைபடுமுலகிற்கெல்லாங்காரியகருத்தன்முன்னர்ப்
படைபடையெனச்சொரிந்தார்படைமுகத்திளைஞர்போல. (கு)

குளங்கரையாகவந்தக்குளத்தினுட்பசுவின்றீம்பால்
விளங்குறுமமுதவேலைவிடுத்தென்னவிட்டார்சில்லோ
ருளங்கனிமூவர்செய்யுளொத்தமுக்கனியுமேனோர்
வளங்கெழுதொடர்புபோலுமற்றையபழமூக்துார்த்தார். (கO)

சற்றினுமுண்கவென்றுதமருபசரியாவண்ணஞ்
சற்றினுமிடுகவென்றுதம்பிரானுண்ணுநின்றான்
மற்றிது கண்டுநின்றோர்மட்கலமொழியவேறு
பற்றிலையென்றுநந்திதிருமுகம்பார்த்துச்சொன்னார். (கக)

பாண்டின்மேலேற்றிவந்தும்பானையிற்சுமந்துவந்தும்
வேண்டியபாகமுற்றுவேறுவேருயவன்ன
மாண்டகைக்குரவனுண்ணவளவிலர்சொரிந்துயர்த்தா
ரூண்டழல்வெறுக்கும்வண்ணமூட்டுவமென்பார்போல. (கஉ)

இட்டவர்மறியவன்னமிடுதற்குவிரைந்துசெல்வார்
முட்டுவரெதிர்நடந்துமூரல்கைவாங்கிவாங்கிக்
கொட்டுவரடிசிறந்தகூடைகள்கவிழ்த்தெறிந்து
தட்டுவரனம்படைக்குந்தம்பிரானடியரன்றே. (கங)

அவரையும்பயறுமெள்ளுமரிசியுமவலுங்கொள்ளுந்
துவரையுங்கடலையுஞ்செஞ்சோளமுநெல்லும்புல்லுங்
குவரையுங்கபிலையும்பொற்குன்றமும்போலஞாலத்
தெவரையுங்களிப்புச்செய்யவெங்கணுங்குவிப்பித்தானல். (கச)

குன்றெனக்குவித்தவெல்லாங்கொள்ளெனக்கொண்டுநம்பன்
மென்றரைக்கணத்துளின்னுமெல்வனகொணர்தியென்ன
வன்றிறற்றண்டநாதன்மனத்தினலைவையியற்றி
ன்றிடத்தம்பிரானுநினைவினலைவையயின்றான். (கரு)

நோக்கினாலளித்தவெல்லாநோக்கினாற்றொலைத்தானந்தி
வாக்கினாலளித்தவெல்லாம்வாக்கினால்வள்ளலுண்டு
போக்கினானிடுதலுண்ணலென்னுமிப்போரின்கண்ணே
றூக்கினாலிருவர்தாமுந்தோல்வியுற்றுடைந்தாரில்லை. (௧௬)

படைத்திடுந்தொழின்முயன்றபத்தனதியல்புமன்ன
துடைத்திடுந்தொழிலினின்றதூயவனியலுநோக்கி
யடுத்தநற்றத்தரெல்லாமனையவரிருவர்சீரு
மெடுத்துரைத்துளம்வியப்புற்றிறைஞ்சினரொருங்குமாதோ. (௧௭)

இடுதற்குவல்லானந்தியிடும்பொருளெவற்றையுங்கை
தொடுதற்குவல்லானிந்தத்தூயவனென்பரிவ்வா
றிடுதற்குவல்லாரில்லையென்பரிவ்வாறுநாங்கை
தொடுதற்குவல்லார்தம்மைச்சொல்லவுங்கேளேமென்பார். (௧௮)

கண்ணப்பனன்பினானேகறியெனவமைத்தவூனை
யுண்ணப்பட்டானின்வேறாமுயிருணினமையவனென்று
வண்ணப்பொன்னனையசென்னவசவதேசிகன்வணங்கி
விண்ணப்பஞ்செய்தான்றுங்கவிடைமுகக்கரந்தானோடு. (௧௯)

வேறு. சென்னவசவன்சொல்லியவச்செயலேசெய்யுஞ்செயலென்று
மன்னுமருளின்மடிவாலமாச்சிதேவன்வந்துரைப்ப
வென்னையுடையானும்மொழியேயென்றுமனத்தைத்தேற்றுமது
பின்னையுளதோகதகமலாற்பெருநீர்தெளித்தற்கென்றுரைத்து. (௨௦)

பொறிகள்கரணம்பூதங்கள்புலன்கண்மற்றும்பல்வகைய
கறிகளாகவாருயிரேகலந்துண்பதமாகியுண்ணப்
பெறுகதிலன்யானெனநின்றுபிறவிப்பிணிதீர்மருத்துவன்ற
னறியமலர்மெல்லடிபணிந்தானமையாளுடையவருணந்தி. (௨௧)

வசவனிலைகண்டருண்ஞானவள்ளலல்லமப்பெயரான்
பசியின்வந்தேனலன்பொருட்குப்படர்காமக்குவந்திலன்யான்
கசியுநினதுமனத்தன்புகாணவந்தேனென்றேத்தி
யிசையின்மலியுமரனடியார்யாருமகிழவெடுத்தணைத்தான். (௨௨)

பரிந்தநந்திமுகநோக்கிப்பசித்தாரென்றுநீதளரப்
பிரிந்தவந்தவடியர்தமைப்பிறங்கலனையநின்மாடத்
தருந்தவணங்கிக்கொணர்தியெனவறிவானந்தமயன்கூற
விரைந்துவிடைகொண்டெழுந்தன்புவெள்ளஞ்சென்றதவரிடத்தில்.

சென்றவசவனருட்குரவன்றிருமேனியிற்றானங்கணிந்த
மன்றன்மலருஞ்சந்தனமும்வடிவிற்றிகழமடிநிமிர்ந்து
தின்றன்முதலகறிமணக்கத்தேக்குவிடுத்துமுகமலர்ந்து
கொன்றைக்கமழ்வேணியனடியார்குழாங்களிருப்பக்கண்டனால்.()

கண்டநந்தியடிபணிந்துகடையேன்செய்தபிழையெல்லா
முண்டுபொறுமின்வருகவெனவுள்ளங்களிப்புற்றாங்கிருந்த
தொண்டர்வசவநின்பெருமைசொல்லவெளிதோவயிறாரப்
பண்டுபோலவாய்கைதொழிறபடாமலயின்றேமின்றென்று. (௨௫)

தேவருண்ணவவியுணவுசெந்தீமுகத்திலிடுதல்போ
லோவில்யாங்களெல்லேமுமுண்ணவடிசிலல்லமன்ற
னாவின்மருவவிடுநினையோர்நாவோபுகலுந்தரத்ததென
வாவியனையநந்திசேரமலனடியார்புகன்றேத்தி. (௨௬)

உலகிலொருவன்சிவயோகியுண்டதம்மசராசரமா
மலகிலுயிர்களெலாமுண்டதாகுமென்னமறைகூறு
மிலகுமுறையைக்காட்சியானின்றிங்குணரவுணர்த்தினான்
கலகவினைகடீர்க்குமருட்கண்ணன்றிகழல்லமதேவன் (௨௭)

ஆதலாலவ்வல்லமனையருத்தலெம்மையெலாமருத்தல்
பாதமவனைப்பணிதலெமைப்பணிதலாகுமென்ஞான்றும்
பேதமில்லைநல்வசவப்பெயரோய்செல்கவென்னமலை
மாதுசமூவக்குழைந்ததோள்வள்ளலடியார்தமைவணங்கி. (உஅ)

ஆரோகணகதி முற்றிற்று.

ஆகத்திருவிருத்தம்-௯கக.

இருபத்துநான்காவது

மனோலயகதி.

வேறு. விருப்புவெறுப்புருவாம்விடயத்தோ
டிருக்குமயற்சகமென்பதிலாமற்
பரப்பிரமத்தியல்பார்ப்பதெனக்குத்
தெரித்தருளென்றுரைசெய்துதுதித்தான் (க)

யானெனதென்பதிருந்திடுமாறு
ஞானமுறுனதுநண்ணிலனுகிற்
றூனிலையாதசகந்திகழ்கிற்குந்
தீனமிலாதசிவந்திகழாதே. (உ)

கறங்கெனுமாறுழல்கின்றகருத்துப்
பிறந்திறவாதபெரும்பிரமத்தி
லிறந்திடில்யானெனதென்னுமகந்தை
மறைந்திடுமன்றிமறைந்திடுமோதான். (௩)

இருவினை தாம்வரும்யானெனலாலவ்
விருவினையால்வருமின்பொடுதுன்ப
மிருவினையானெனலின்றெனிலில்லை
யிருவினையில்லெனிலில்லைபிறப்பே. (ச)

மனத்தையடக்கமனந்துணையாகும்
பினைத்துணையின்றதுபெற்றனனுயிற்
றனிச்சிவமேயொருதானெனவாழ்வ
னினைத்துமறந்துநிலத்துழலானே. (ரு)

வாரணமாகுமனத்தையடக்கிற்
காரணமாயைகளைந்தொழியாத
பூரணமாகியபோதமடைந்திட்
டாரணமோதுமரும்பொருளாவான். (சு)

வேறு. விரிந்தநெஞ்சங்கருவியாம்விடயமுணரவிரியாம
லொருங்குநெஞ்சங்கருவியாந்தன்னையுணரவொருங்காமல்
விரிந்தநெஞ்சமுடையவனைவிடாதுபிறவியென்றுணர்க
வொருங்குநெஞ்சமுடையானையுறுதுபிறப்பென்றுணர்கவே. (எ)

அந்தக்கரணசுத்தியேயறிவையறிதற்சாதனமவ்
வந்தக்கரணசுத்திதனக்கறையுங்கருமமாரணங்க
ளந்தக்கரணசுத்திதானுவதவாவற்றிடுதலே
யந்தக்கரணசுத்தியினாலடைவன்பிண்டப்பெயரன்றே. (அ)

ஆசையறுதல்வீட்டின்ப்நேரேயடைதற்காரணமா
மாசையறுதலலதில்லைப்பலநூலனைத்துமாய்ந்திடினு
மாசையறுவோன்சிவஞானிமண்ணமெனநன்றறிந்திருந்து
மாசையுறுதலென்கொண்டோவந்தோமனிதரறியேமே. (கூ)

ஆசுதீர்ந்தமனத்தினிடையன்றியுணர்வுதோன்றாது
மாசுதீர்ந்தவாடியிடையன்றிவதனந்தோன்றுமோ
பாசநீங்குபரஞ்சுடரைநினைக்குநினைவாற்பற்றுமனங்
காசநீங்குகண்போலத்தன்னைக்காண விளங்குமால். (க௦

வானமல்லேன்வளியல்லேனழனீரல்லேன்மண்ணல்லேன்
ஞானமல்லேன்வினையல்லேனானே சிவமென்றெண்ணினோ
னூனையல்லாலொருசிவமேயாவனிவ்வாறுன்னுதா
னினமெல்லாமுடையவுடம்பெடுத்துச்சுழலுமென்ஞான்றும். (கக)

தன்னைச்சிவமென்றறிந்தவனேயறிந்தான்றன்னையுண்மையாத்
தன்னைச்சிவமென்றறியாதானறியானென்றுந்தன்னுண்மை
தன்னைச்சிவமென்றென்றறிவனன்றேபாசந்தனைநீப்பன்
றன்னைச்சிவமென்றறியாதான்றனக்குப்பிறப்பேதுணையாகும். (கஉ

தன்னைப்பேதமாய்க்காண்கைசகத்திற்காணப்பட்டதாந்
தன்னைப்பேதமறச்சிவமென்றறிவான்ஞானிதானொருவ
னென்னக்கருதிமறையதுநீயானாயென்னவத்துவிதந்
தன்னைப்புகலுங்கண்டதனைச்சாற்றன்மறையின்கருத்தன்றே. (கங)

தூய்தாகியநெஞ்சுடையார்க்குத்தாமேசிவமாத்தோன்றுமாற்
றீதாகியநெஞ்சுடையார்க்குத்தெளியவபேதமிகலின்றி
வேதாகமங்கள்விளம்பிடினும்விளங்காதென்றும்வேறென்னும்
வாதாலழிவரவர்மாயைமயக்கமயங்குமதியினார். (கச)

மனோலயகதி முற்றிற்று.

ஆகத்திருவிருத்தம்-கஉரு.

இருபத்தைந்தாவது,
மான்மியகதி.

எல்லொளியிரவிபோலவிருண்மலமிரிந்திலங்கு
மல்லமன்சரிதமோதிலறம்பொருளின்பம்வீடாம்
நல்லனபயனோர்நான்குநண்ணுவனிதனைக்கேட்க
வல்லநல்வினையினானுமற்றவைமருவிவாழ்வன். [க)

மதியிலார்மதிஞராவர்மகவிலார்மகவுயிர்ப்பர்
நிதியிலார்நிதிபடைப்பர்நிலையிலார்நிலைத்துவாழ்வார்
பதியிலார்பதிகிடைப்பர்பழுதிலிவ்விருபத்தைந்து
கதியினானிரம்புகாதைகற்றவர்கூறக்கேட்பின். (உ)

புண்ணியருலகில்வாழ்கபுலஞ்செறுநோன்புவாழ்க
பெண்ணொருபாகன்பூசைபேணிவாழடியர்வாழ்க
கண்ணுதலொருவற்சார்ந்தகற்புடைச்சைவம்வாழ்க
வண்ணலல்லமன்சீர்கேட்குமாதரவாளர்வாழ்க. (ங).

மான்மியகதிமுற்று.

ஆகத்திருவிருத்தம் - ௲உ௮.

பிரபுலிங்கலீலைத்திரட்டுமுற்றுப்பெற்றது.

திருச்சிற்றம்பலம்.

சர்வஞ்சின்மயம்.

இப்புஸ்தக முதற்பாரக்கதிமுடிவுகளில் ஆககதிவிருத்தமென்றிருத்தல்பிழை அவைகளை ஆகத்திருவிருத்தமென்றுவாசித்துணர்க.

கணபதிதுணை.

திருச்சிற்றம்பலம்.

பிரபோத சந்திரோதயத்திரட்டு.

காப்பு.

திருமடந்தைதன்காதலன்சிவந்ததாண்மலருங்
கருணையந்தடங்கண்களுநாபியங்கமலத்
தொருகுழந்தையுமுடுத்தபொன்னுடையுந்தொடுத்த
மருமலிந்தபைந்துளவுமென்மனத்துள்வாழியவே.

நூல்.

அம்புவிமாந்தர்க்கெல்லாமாயுளோசிறிததற்குள்
வெம்பிணியிளமைமூப்புவிழிதுயில்சோம்புகாதற்
கம்பலையிவற்றைநீக்கிக்கற்பதெங்ஙனங்கற்றாலுந்
தம்புலஞ்சிறிதுஞானசாகரம்பெரிதென்றன்னி. (௧)

நீர்கொண்டபெருக்கினைவெங்கானலிற்கண்டாற்போனெடுவிசும்புமுதனிலனீரொன்றினிடத்தொன்று, வேர்கொண்டமூவுலகுமதுதேராதாற்குமெய்யாகித்தேர்ந்தளவின்மீண்டுமவைபொய்யாந், தார்கொண்டபணியுருப்போ §லன்னிபிடானந்தந்தானாகி நிருமலமாய்த்தழைத்தோங்குமொளியா, யேர்கொண்டவாத்மபோதந்தனையேவணங்கியிதையகமலத்திருத்தியெப்போதும்வாழ்வாம். (௨)

§அன்னிமிஷானந்தமென்றும்பாடம்.

வேறு. அத்துவிதம்வாசாமகோசரமனோதீதமசலமூலந்
தத்துவமப்பிரமேயஞ்சருவசமஞ்சச்சிதானந்தஞ்சாந்தஞ்
சுத்தமவ்வியத்தமவிகாரமநுபவந்துரியஞ்சுயம்பிரகாச
நித்தியநிர்க்குணமனந்தநிரதிசயம்பிரமமெனநின்றதொன்றே. (௫)

போந்துவிகாரஞ்சிறிதும்பொருந்தாததன்னியல்பிற்பொருந்திநிற்ப
காந்தமசையாதிருந்துமக்காந்தத்தெதிரூசிகம்பித்தாற்போல்
வாய்ந்தவதன்சந்நிதியின்மாயைவிகாரம்புரிந்துமணிச்சூன்முற்றி[னோ
யேய்ந்தபெயர்மானதனென்றெடுத்தோதவொருமகவையீன்றுண்மன்

இருளதனையொளியாக்கியொளியதனையிருளாக்கியின்பந்தன்னை
யரியகொடுந்துயராக்கியத்துயரந்தனையின்பமாக்கிச்செய்கை [ம்
மருளுறுமன்னெடுமோயைமார்பிலணைத்தேவளர்க்கவளர்ந்தானியாது
பொருவறுதன்றுதையெனுந்தருவினுக்கோர்புல்லுருவிபோலவன்றே

வேறு. இடம்பெறுஞ்சோதிரூபமேகமாகியும்பல்கோடி
யுடம்புகடோறுமங்கங்குறைகின்றதெவ்வாறென்னிற்
படர்ந்தொளிபரப்புஞ்சோதிப்பருதியொன்றாயுந்தெண்ணீர்க்
கடந்தொறுமோரோர்விம்பங்காட்டுதல்போலுமன்றே (௬)

மாசுறுமாயப்பாட்டிவஞ்சனைநினைத்தவாறுந்
தாய்செயலுணர்ந்துசெய்மூதாதையைத்தகைந்தவாறு
மாசைவன்கயிற்றாற்காமனுதியோர்பிணித்தவாறு
மீசனுமிடரிலோனுக்கிடர்வந்துவிளைந்தவாறும். (௭)

கண்டகங்கலங்கிவெய்யகண்டகர்புரிந்தவஞ்சம்
பண்டைநூனெறியிற்சொல்லும்படியன்றிப்பழியையாரே
விண்டுரைசெய்யவல்லார்விழுமியதருமநீக்கிக்
கொண்டவெம்பாவத்தோரைக்குறுகினும்பாவமன்றோ. (௮)

சருமமாவதுவேயின்பந்தருமலாற்றருமமீக்குங்
கருமமாவ:துபோற்றேன்றிக்காட்டினும்பசுமட்பாண்டத்
தருமையாய்நிரம்புந்தெண்ணீரனைத்துமப்பாண்டத்தோடு
மொருமையாய்க்கெடுத்தலேபோன்றொருகணத்தழியுமன்றே. (௯)

செம்மையிற்றிறம்பியன்னசிறுதொழிற்செய்கையூணி
லிம்மையிற்பழியும்வாளுட்கிறுதியுமிற்றபின்னை
யம்மையினரகுமெய்தியருங்கிளைச்சுற்றத்தோடும்
பொய்மையிலின்பவீடும்போக்குதிவறிதினென்றான். (௧0)

வேறு. கல்லாமைகொலைதீமைகளவாசையின்சொற்
சொல்லாமைநடுவின்மைசுடுகோபமிவையே
யல்லாமலறமேதுமறியார்தம்முளமாம்
பொல்லாவவித்தியாபுரமொன்றமைத்தான். (௧௧)

அம்மாநகர்க்குள்ளவரணேதவெளிதோ
தம்மாதுலன்பெண்டிர்தாய்தந்தைமகவென்
றிம்மாமயக்கஞ்செயினமேற்றுவதுபோல்
விம்மாவெழுந்தாழவீழ்விக்குமகழே. (௧௨)

ஒழியாதசிவனுக்குமுவணத்திறைக்கும்
பழியாதுமில்லாதபதுமாதனற்கும்
விழியாயிரங்கொண்டவிண்ணோர்பதிக்கு
மழியாதசங்கற்பமகழ்சூழ்ந்தமதிளே. (௧௩)

இன்னானியானின்னனிவனெனென்மனையென்
பொன்னுடையென்வாழ்வுபொருளென்குலத்தோர்
மின்னாருமென்பூணென்விளைபூமியெனவே
புன்னாளுமொழிகின்றபதணங்கொள்வதுவே. (௧௪)

வேறு. மீதிற்காணும்பசும்புற்பனியெனமின்மினிக்குளொளியென வேட்கைகூர், வாதைக்காமினிச்சஞ்சலநெஞ்செனமாறிமாறிவருறு கண்ணிமையென, வூதைக்காலெறிநீர்மேற்குமிழெனவும்பர்மேகத்து மின்னெனவோர்கணப்,போதைக்காயிரமாளிகைகட்டிவீண்போக்கிப் போக்கிப் புதுமாளிகை செய்வான். (கரு)

வாதித்திந்திரன் வச்சிரவாண்முனைவாய்மழுங்கமலையரிந்தாலெனச், சேதித்தற்குஞ்சிதையாமறப்பாரித்துத்திரண்டகல்லினுஞ்சிக்கென்றசி ந்தையான், சோதிச்செம்பொற்சுடர்வடமேருவைச்சுற்றிக்கங்குறு லைக்கின்றபன்னிரண், டாதித்தற்குமகலாதவல்லிருளனைத்துங்கூடி யொருவடிவாயினேன். (கசு)

நசையுரைக்கி னெடுமரப்பாவைதன்னுவசைக்கினுநாவசைக்கின்றிலா ன், வசையுரைக்கின்மயிர்க்காலுக்கோரொருவாய்கொலோவெனவார் த்தைசொல்வாயினன், பசையகற்றியதன்பழிகாண்புழிப்பார்வை யோதிரிதராட்டிரனயினே, னிசைவிலக்கிப்பிறர்பழிநோக்கிற்கண் ணீரைஞ்ஞூறுடையிந்திரனயினேன். (கஎ)

புகலுவார்பெருவம்புபல்கோடிபோய்ப்புகுந்திருக்கின்றபுற்றெப்பதா யினேன், றிகழுவாரறநுண்ணூனுழைத்திடிற்செல்கிலாவச்சிரச்செ வித்திண்மையா, னிகழ்வதாயிமைப்போதுமிலக்கின்றியேகும்வா ழ்வுமியாக்கையுநோக்கையு, நிகரிலாவிவைநீடுழிகாலமுநிற்பதாகநினை க்குநினைவினேன். (கஅ)

ஏற்றவர்க்கொன்றையீயவென்றாற்குறைத்திரண்டுகையுமிழந்தவனாயி னேன், மேற்றெனக்கெனவெற்புழிக்காத்தியவீரியார்ச்சுனன்வேட் கும்பல்கையினு,னாற்றுநல்வழிச்செல்வுழிக்கால்முடமானமைந்தனவ னெனவாயினன், மாற்றுத்தீவழிச்செல்வுழிச்செம்பொன்மால்வரை யைச்சூழ்கதிர்மண்டலம்போன்றுளான். (கக)

பாவகன்மமாம்வென்னீரின் மூழ்கிமேற்படர்விழுப்பெனும்பட்டாடைசாத்திப்பின்,மேவுகின்றவவகுணப்பன்மணிமீதபூண்டுவிடாததுர்வாசனைப், பூவணிந்தபகாரமென்சந்தனம்பூசிப்புன்மையாம்போனகந்தன்னையுண், டாவதற்றகுடிலத்தண்ணீர்குடித்தடர்பிறப்பிறப்பூஞ்சலிஞடுவான். (௨௦)

வேறு. விதிதனக்கதிலையென்னினும்முயற்சிகொடுவிரவுதுன்
மதிநடத்தயெமலோகபரியந்தமிசைவாவியே
கதிவிசைக்கொடுசுழன்றுலகமுழுதுமோர்கறங்குபோ
லெதிருறக்கடவியிகலுமவனெருவிடயவிரதமே. (௨௧)

வேறு. உற்றபொருள்பற்றியிகல்வெற்றிகொள்முற்றுமதையுன்னிமா
னற்றருவினம்பினெடுவாயுகதியும்பிறவுநாணவேழ்
கற்றடமுமேழ்கடலுமேழ்புவியுமங்கொருகணத்திலே
சுற்றிவருமற்றவனியற்கவலையாகுமோர்துரங்கமே. (௨௨)

மாதவனிடத்துமதிவேணியனிடத்துமலர்வனசமேல்
வேதியனிடத்துமுனிவோர்தமதிடத்துமெதிர்மேவியே
மூதறிவையெற்றியுறுகாயம்வருவிக்குமொருமோகன்வெம்
பாதகமியற்றுமவிபரீதநெறியாகியபதாதியே. (௨௩)

எண்டிசையுமேழ்கடலுமெட்டுமலையும்புவனமேழிரண்
டுண்டெனவயங்குதொகையுங்குலவுபாதலமுமும்பரு
மண்டலமுமெங்கணுநடந்துதடையின்றிவிசைமண்டியே
யண்டபகிரண்டமுமயக்குநெடுமோகனவனுணையே. (௨௪)

செங்கதிர்நெடுங்கிரணமெள்ளளவுமெங்குமதுதெரிவுறு
தங்கணெடுவானிலிருண்மேகபடலம்படருமமைதிபோற்
பங்கமறுமீசனெளிர்சோதியிலகாதவகைபகலினுங்
கங்குலெனவேமிசைகவிக்குமதிகேடெனுமோர்கவிகையே. (௨௫)

வேறு. எள்ளிற்சிறுபாதியிற்பாதியதென்றதேனுந்
தள்ளப்படுநண்பகையென்றுதவிர்ப்பதன்றால்
முள்ளிற்பெருவன்மரந்தன்னைமுளைக்குமுன்னே
கிள்ளிற்கெடும்பின்புகோடாரிக்குங்கெடுறதே. (௨௬)

வேறு. கொடையிலாண்மையிற்கேண்மையிற்பொருவருங்குணத்திற்
படையிற்சீர்மையிலொழுக்கத்திலெவரையும்பழிக்கு
நடையில்வாய்மையிற்றூய்மையிணுகரீகத்திற்
றடையில்செய்கையிற்றவத்தினிற்பெரும்புகழ்தன்னில். (௨எ)

நீதியின்மேன்மையிற்குலத்தினிற்பெருநியமத்தி
லதிகனியானெனுஞ்சிறப்புமேற்கொண்டகங்கார
னெதிருறுஞ்சமன்வலிதுலைத்துலகெலாமெய்திப்
பதிகொளும்படிகவுடமேவுதியென்றுபணித்தான். (௨அ)

சாற்றும்வீறெனுமியானைசிங்காரமாந்தடந்தே
ராற்றுபொய்வணக்கடுசிலைகுடிலச்சொலணிக
மேற்றுமுட்கவட்டொழுக்கமாமிவுளியென்றினைய
கூற்றெனுந்திறலிடம்பனுக்குடன்படக்கொடுத்தே. (௨௯)

மனத்தெழுங்களிப்பெனுங்கரியெவரையுமதியாத்
தொனிக்கடும்பறைதன்னைமேலேற்றுமாதுரங்க
மெனைத்துமம்மதர்கீந்தகங்காரனுக்கியன்ற
தனைத்துங்கொள்கவென்றவற்குளவரிசையுமளித்தே. (௩௦)

வேறு. இத்தகையதாகியுலகேழினுடனேழுமழலிட்டதளிர்போன்
மெத்தவெயிலூடுலையுமென்பிலதுபோன்மிகவும்வெம்பிட்டே
சத்துருவிரோதமடருங்கொடுமைகண்டுமெய்தளர்ந்துவலிதாழ்ந்
துத்தமசிரோமணிவிவேகனொருசாரதினொதுங்கினனரோ. (௩௧)

வேறு. தாவுமடற்புலியாரணியர்தன்னி லுறைந்ததுதனைநீங்கிப்
போவதுபெற்றுநல்விதிவலியாற்பொன்றுதற்பியபுல்வாய்போற்
பாவிபடைத்தலைவீரரெமைப்பங்கமுறச்செய்தபாடுபொறுத்
தாவிபிழைத்தனமையாநின்னருளெம்மிடத்துளதாதலினால். (௩௨)
தாழுமவர்க்கொலிவாருதியுந்தன்னுளமிழத்துமோர்நாவாயாற்
போழுமவர்க்குநன்மணியுஞ்செம்பொன்னுமளித்திவைபுனைவிக்கும்
வாழுமவர்க்குளதுறவெங்குமற்றையவர்க்கிலைமரபினுமீ
ரேழுலகத்தையுமபகிர்குமெரிசிறிதாயினுமெண்ணுரால். (௩௩)
பாரியனின்னெடுபேகின்மோகன்பகைநொடியிற்பொடிபண்ணேமோ
ரீரியலின்றிநல்விதைபோய்நன்னிலமுறினும்பயிர்நீராமோ
கூரியபைங்கொடிபலவுங்கொள்கொம்பெழியிற்படர்குணமுண்டோ
வீரியரெத்தனையோரேனும்வேந்தனிலாப்படைவெல்லாதே. (௩௪)
வேறு. சொற்றருமஞ்சிதைக்குமன்னர்சொன்னபடிசொன்னவரே
தொலையாச்செல்வம், பெற்றருள்வரவைத்திருத்திப்பேசினர்க்குமுற்
கேடுபிறக்கும்பித்தற், குற்றகுணநூலினுஞ்செவ்வொழுக்கன்றேயூன்
புசிக்குமுழுவைமுன்போய்க், கற்றறிநல்லறமோதிற்கடுங்கொலைமா
பாவமெனுங்கருத்துருதே. (௩௫)
அன்றுலிற்றயின்மாலுமண்டருமந்தரமலையிட்டலைவதாக்கி, நின்றுலு
ந்தன்வருத்தநினையாதபாற்கடலினீர்மைபோலக், கொன்றாலுமழலெ
ழுத்திக்கொளித்தினுஞ்சிற்றறிவாளாற்கொய்துகொய்து, தின்றாலும்
பொறுப்பதல்லாற்றீங்குதந்தைக்கிழையாதென்சிந்தையென்றான். ()
குருவரசனன்னைபிதாத்தம்முனெனத்தொழத்தகுமைங்குரவரேனும்
பெருமிதங்கொண்டடக்குமடாதிதுவென்பதுணராமற்பிழைசெய்வா
ரேற், றருமநெறியுணர்தமிக்கோரவரவர்க்குத்தக்கதண்டஞ்செய்த
லோவா, மருவுதிரைக்கடலுடுத்தமாநிலத்திற்பண்டைமனுவசனமன்
றோ. (௩எ)

மூதாதைதனைச்சிறையிட்டெனக்குமுன்ருய்க்குந்துயரமூட்டிப்பஞ்ச
பூதாதிபல்லுயிர்க்குமிடரிழைத்தவஞ்சகர்மேற்போர்செய்யாம, லாதா
ரந்தமர்நமக்கென்றன்புசெயிற்பின்புகுணமவர்க்குண்டாமோ, கோதா
யவன்பிணிக்கோர்கொடியமருந்தூட்டினல்லாற்குணங்கொடாதே.()

காமாதிபடைஞரெனுங்காலிபுகாதறன்வேலிகட்டித்தீய,மாமாயை
மிகுமோகனெனுங்களையும்வேரோடுவாங்கிநீக்கிக், கோமானின்கரு
ணைவெள்ளைநீர்பாய்ச்சியுணர்வெனும்பைங்கூழ்மீதோங்கற், காமாறுவி
ளைக்கினல்லாலாராவின்னமுதமேவற்கனுகலாமே. (௩௯)

மாதாவின்குறைதவிர்த்துன்மரபிலெம்மனோர்குறையுமாற்றிம
ற்றை,மூதாதைகொடும்பிணிப்பின்மூட்டறுத்துமீட்டுலகமூன்றுநீயே
யாதாரமெனக்கொடியவவித்தைநகரரசனையுமடர்த்துமற்றைத், தீதா
யவெவ்வினையுந்தீர்த்தருளென்றிவ்வாறுசெப்பினுனல். (௪0)

வன்மொழில்வாள்வினுந்தம்வறுமையேபினிதென்றுன்னு
நன்றறிவாரிற்புல்லர்செல்வரேநடுவோராமற்
புன்மொழிற்செயலாலென்றுபுகன்றமுன்னூலோர்வாய்மை
யின்றதுநம்பாற்கண்டோமிதற்குவேறுவமையுண்டோ. (௪௧)

வேறு. செங்கதிரவற்கெதிரோர்தீபமிடலேபோற்
றங்குபிறமற்கொருசடங்குசொல்வதேபோற்
புங்கவனின்க்கொருவர்புத்திசொல்வதேனு
மிங்கெனதுபுன்சொலுமியம்புவதுகேளாய். (௪௨)

மூந்துவிடாகமொருமூச்சுவிடுமுன்னே
சிந்தமெலிபற்பலதிரண்டுவருமேனு
மிந்தனமலைக்குவமையென்னநிறைவுற்றும்
வெந்தழலினுட்பொறிதெரித்திடினும்வேமால். (௪௩)

எறிகடனெடும்புவியிலேதுமிலரேனு
மறிவுடையரேயுடையரியாதுமறிவில்லார்
செறிவுடையசெல்வமொடுசீருடையரேனும்
வறிதுடையரல்லதவர்மற்றுடையரன்றே. (சச)

ரீயிதுகருத்துறநினைக்கினெடுமோகன்
மாயவினையுந்திறனுமற்றுளசெருக்குந்
தீயபலசேனையொடுசெல்வமுமனைத்து
மேயெனுமோர்மாத்திரையிலிற்றுவிடுமென்றான். (சரு)

சாரும்வகைமெல்லெனவியற்றுதறவிர்ந்தே
காரியவசத்தினர்கள்கைபதறல்செய்யார்
பாரையுமடங்கநிமிர்பாறைசிறுதுறின்
வேறதுபிளந்திடவெடிக்கும்வகைகண்டே. (சசு)

வேறு. தொன்னாட்டவமுயன்றோர்களுந்தொழில்வெய்யவருறையு
மன்னாட்டிடைபுக்கார்குணமம்மூர்க்கரோடொப்பார்
முன்னாட்டியமதுரக்கனிமுதிருப்பளமுற்றாற்
பின்னாட்டனதுருவத்தொடுபேரும்பிரிதாமால். (சஎ)

கனகங்கரிபரிதேர்குடைகாலாண்மணிமகுடம்
புனையும்பணிமடமங்கையர்புணரப்புவியரசாய்
வினையின்கண்முயன்றாலுமுள்விழைவங்கதினில்லாச்
சனகன்சதிருரையாதவர்தரைமீதெவர்தாமே. (சஅ)

யாதுந்தெரிகிலரும்புகலேவற்றொழில்செய்துங்
காதும்பலியிடுவானொடுகோளிக்கெதிர்வந்தும்
போதும்புரவலனூர்திபுயங்கொண்டுசுமந்து
மோதுஞ்சடபரதன்றனையுணராதவனலனே. (சகூ)

காதிற்கயலெனவேபொருகண்ணாரொடுமின்பஞ்
சாதிக்கினுமேலோர்மதிதானங்ஙனமுறுமோ
வீதிக்கிடைநடனத்தொழில்வெவ்வேறுசெயிதிடினுந்
தாதிக்குளமவளேந்தியதண்ணீர்க்குடமீதால். (ருo)

தக்கோர்பலமடவார்முலைதழுவிக்கொடிருந்தென்
மிக்கோரவர்சிலர்மாதவவேடங்கொடிருந்தெ
னக்கோதறுமுளத்தோர்க்குமகந்தூய்மையிலோர்க்குந்
திக்கோதறுமிழிவென்பதுஞ்சிறப்பென்பதுமுளதோ. (ருக)

வேறு. கொடியவெம்பாவத்தோரைக்கூறுகூருகவாட்கொண்
டடிமுதன்முடியீருகவரிந்துமாரழலினிட்டுங்
கடியபாம்பட்டைசெந்தேட்கைமிகுங்குழியில்வீழ்த்து
மிடியெனத்தழலிற்காய்ந்தவிருப்புத்தூணோடுசேர்த்தும். (ருஉ)

வேறு. பெண்டீர்மக்கள்கிளைஞரிவர்பின்னுக்குதவியென்றெண்ணிக்
கண்டீரறத்தைவிட்டவராற்கடன்பட்டிறுத்தோமென்பசில
ருண்டீருடுத்தீர்சுற்றத்தீருற்றவேளைக்கொருவரும்வந்
தண்டீரந்தோவும்மைநம்பியானதிதுவோவென்பர்சிலர். (ருங)

மாறுபாடாய்க்கொடுஞ்சாறுவாகப்பாவிமறங்கூறி
வேறுலோகமில்லையென்றான்வினவிக்கெட்டோமென்பர்சிலர்
நீறுகோபித்திருநாமநெற்றிக்கணியாநெடுஞ்சமணர்
தேறுநூலின்வழிபுகுந்துதிகைத்தோமென்றுசிலர்சொல்வார். (ருச)

தேடிப்பொருளைச்சிறுதொழிற்கேசெலுத்தியுணர்ச்சிதெரியாமற்
பாடிப்பதருக்கிறைத்ததெலாம்பலித்ததெமக்கிங்கென்பர்சிலர்
கேடிப்படிவந்தெமைச்சூழக்கெடுத்தபாவியுலகிலின்ன
நாடிப்பிறக்கவிடினுமங்ஙகனுடோமென்றுசிலர்சொல்வார். (ருரு)

என்றுமிறவோமென்றிருந்தோமிறந்துபடுவநீதநிந்தா [ர்
லன்றுபடைத்தபொருளையன்றேயருள்வோமறையோர்க்கென்பர்சில
சென்றுவரவாங்கெமையின்னுஞ்செலுத்திற்புதைத்ததிரவியத்தை
யொன்றுமொழியாதறம்புரிந்திங்கோடிவருவோமென்பர்சிலர் (ருசு)

பிறந்தவுடனே துறந்துசுத்தப்பிரமமுணர்ந்துபிறப்பதனை
மறந்தின்னரகத்தெய்தாமைவருமோநமக்குமென்பர்சிலர்
ணிறந்துநிரையத்தழுந்தியிடரிவ்வாறுழப்பதறியாமற்
சிறந்தவிவேகர்பெருமான்றன்செயலைத்தவிர்ந்தோமென்பர்சிலர். ()

வேறு. அறவுங்கொடுந்தீமையவர்செய்ததாற்றுமையாலல்லவோ
வுறவுந்தம்மனையுந்தம்மூருந்தம்வளநாடுமுறுசெல்வமும்
பிறவுந்தவிர்ந்தன்னபிறவிர்த்திவிட்டுற்றபெரியோர்களுந்
துறவின்கண்வந்தூர்தொறும்போயிடும்பிச்சைதுய்க்கின்றதே. (ருஅ)

அஞ்சாக்கொடும்புல்லரழலுக்கிவ்வழல்சீதமாமென்னவே
பஞ்சாக்கினிக்குட்பயின்றேருமப்புன்மைபாராமலே
துஞ்சாத்தடங்கண்முகிழ்த்தாரும்வெளிபூடுதோன்றுமலே
யெஞ்சாப்புணர்ப்புக்கொளித்தாருமுளர்நம்மினத்தோர்களே. (ருகூ)

வேறு. இருந்தராதலப்பரப்பிலிடுக்கண்மேலிடுக்கணெய்தியிமைப்பி
ல்வீய்ந்து, வருந்துமாறுடப்பிறப்பின்மங்கைநல்லாரொடுமுயங்கிம
கிழ்ந்துகோடல், பருந்தின்வாய்ப்படுமேரவம்பிடித்தமண்டுகேங்கொள்
சிறுபறவைசெந்தே, னருந்துமாறொப்பதனாலாங்கதுசிற்றின்பமென
லாயிற்றன்றே. (சுO)

வலியோர்மேல்வரும்வெகுளிமறித்துடனேதமைக்கெடுக்கும்வ
றிதேகோபம், மெலியோர்மேல்வரிலிகத்தில்வெம்பழியுமேனரகும்வி
ளைக்குமல்லா, னலிவோர்தமூவப்பினுக்குநகைக்குமெய்துங்கேடினிய
நட்புமாற்றும், புலியோகம்பசுவினம்போற்பல்காமையதன்சினத்தி
ன்பொருட்டாலன்றே. (சுக)

அடிதாக்கக்கையேற் பாரேனுமவர்குற்றமுணர்ந்ததற்குத்தக்க, படியாய்ச்செய்துறுகருமம்பழுதுபடாதியற்றுவதேபலமாய்க்கொண்டு, கடிதோச்சிமெல்லெனப்பூப்போலெறியுந்தன்மையர்க் கெக்காலுங் குன்றா, நெடிதாக்கந்தருமிஃதிபாங்கிழ்த்தியதம்மிடத்தில்வைத்தநேயத்தென்றான். (௬௨)

வாணாளோர்கணப்பொழுதுநிலையாலவென்றறிந்துமலைவனங்கடோறும், வீணாகவுலைந்துலைந்துமிகுதனமாற்சிப்பதுவேவிரதமாகி, யூணாசைகாய்கனியாயுடுப்பதுமோர்மூழத்துண்டாயுலகவாழ்வுஞ், சேணடைபுகும்வாழ்வுஞ்சிதைந்துநட்டம்பிறப்பித்தல்செய்கையன்றே.()

ஈட்டியருந்திரவியத்தைப்பொன்காத்தபூதம்போலிருந்துகாக்க
மூட்டியசிந்தனையைவிட்டுத்தவந்தானந்தன்மத்தைமுடிவுறமற்
காட்டியமுதண்டுடுத்துகலிதீர்ந்துவிண்மனைக்கபாடம்பண்டு
பூட்டியதுதிறந்ததனுட்பொன்னுலகநாதராய்ப்புகுசிரென்றான். ()

ஈனமில்லார்மொழிந்தசெஞ்சொலினிதினிதென்றுட்கருதியெம்முனோர்க, ளானவர்தேடியபொருளுமவர்போனபோக்குமெங்கேயதனலன்ன, தானமுதலாயபலதானமியாஞ்செய்துமென்றுதருமநீதி, போனவழிபுகுந்தன ரவ்வாறுகண்டோர்சிற்சிலரும்புரிவதானார் (௬௫)

அகங்கரிப்புவரிலெவர்க்குமறங்கெடுக்குங்கற்றகல்வியழிக்குமுள்ளம், புகைந்தெழுப்புங்கனலைமிகப்புழுங்கிவிக்கும்பிறரைநகைபுகுத்துமார்க்குந், தகைந்துசுவர்க்கத்தினையுந்தடுக்குமகத்துஞ்சிறிதுதவஞ்செய்தாலுஞ், சுகந்தவிர்க்குமீளாதநரகினுய்க்குமிதுநமக்குத்தூய்மையன்றே. (௬௬)

தக்கனியாகம்புரிந்ததலைநாளிலகங்கரித்துத்தனக்குமேலா
முக்கணனையிகழ்ந்தமையான்முடிபோயுமடுத்தவர்க்குமூக்குப்போயு
மிக்கதடக்கைபோயுமேனிகுளம்பிப்போயும்விழிபற்போயும்
புக்கதிசைதெரியாமற்புறம்போயும்பட்டதுயர்புதுமையன்றே. (௬௭)

ஆதலினாலத்தொழிலைவேரோடும்புரத்தகற்றிலதுவேதூய [சு
மாதவமும்பெருந்தனமும்வண்மையுந்திண்மையுமறிவும்வாழ்வுந்தே
மோதரியசுவர்க்கமும்வேறுறுபொருளுமென்றனரதொக்குமென்றே
காதலித்தார்சிலரவரைக்கண்டுசிலரவ்விரகைக்கைக்கொண்டாரால்.

இவ்வுலகோர்தமைவென்றுபொருட்கவர்தற்கிவரியற்றுமிடம்பாசார
மவ்வுலகஞ்சென்றிடுமோவென்றுநகும்பூதங்களைந்துமுள்ளே
கவ்வையுறுமுட்கவடுகண்டநமன்றமருமரைக்கணத்திலாவி [ல்.(௬௧)
தெவ்வரெனக்கொடுபோய்த்தீநரகில்விடுத்துமென்றுஞ் சிந்திப்பாரா

அகங்காட்டுந்தங்கவடமவரவருள்ளொளித்தாலுமடுத்தபேர்க்கு
முகங்காட்டுமெல்லவெனின்மொழிகாட்டும் பிறர்நகைக்குமூரல்காட்டு
ஞ்,சுகங்காட்டுவதுபோன்றுதுக்கமிகப்பின்காட்டுந்தொழிலாமாபோ,
லிகங்காட்டுநமதியன்மேலெண்ணிலாநெடுந்துயருக்கேதுவாமால். ()

கரதலாமலகம்போற்கருத்தியலும்புறத்தியல்போற்காட்டுவார்க்கு
விரதமாதவம்பிறவும்வெண்டுமோவவர்புகுதாவீடுமுண்டோ
சரதமாமிதுவென்றாரென்றலுமீதுள்ளதென்றுதம்மிற்றாய
நிரதராயினர்சிலர்பின்னுஞ்சிலரங்கவர்மொழியானெறியினின்றார்.()

கற்றறிவுகுலமேன்மைகருணைபெரும்புகழ்செல்வங்கைமாறெண்ணா
துற்றுதவுகொடைசீர்மையொழுக்கமருந்தவநியமமுறவின்கேண்மை
மற்றெதிரில்லாத்திண்மைவாய்மைமிகுந்தூய்மைகுணம்வனப்பியாவு
ம், பெற்றிடினுமடக்கமிலாப்பெருமிதத்தாலத்தனைக்கும்பிழையுண்
டாமால். (௭௨)

இழிகுலத்தோராயினுந்தம்மியலடக்கமுயர்குலத்திலேற்றுந்தீய
பழியகற்றும்புகழ்பெருக்கும்பண்புநண்புமிகவிளைக்கும்பைம் பொன்
னாட்டின், வழிபுகுத்துமென்றினையபிறவுமிதமுறப்பகர்ந்துமருந்தாற்
பித்தர், கழிமதத்தையடக்குதல்போனற்குணஞ்சிற்சிலர்க்கு வரக்கற்
பித்தாரால். (௭௩)

வேறு. பெண்ணியலதுசொல்லாமுன்பெருந்தகையவளைநோக்கிக்
கண்ணினுமினியராகிக்கரவிலாவுள்ளத்தோடு
மெண்ணியதளிப்பார்கண்ணுமிரவச்சமுறுவரிந்த
மண்ணியன்மாந்தரென்றான்வஞ்சிமற்றிதனைச்சொன்னாள். (எச)

வேறு. பத்தியாய்வரவழைத்திளவிதவையர்பலருக்
கத்தியான்மபோதனைசெய்வார்போற்குருவாகி
மத்தியானமுமாலையுமகன்றபின்மணாளர்
சித்தியாயினரவர்க்கெனச்சிலருளர்சேர்வார். (எரு)

வேறு. உற்றுபநிடதத்துட்பொருடன்னையுணர்வுறாதொருவருக்கொ
ருவர்,கற்றறிவோதியத்துவைதந்தாங்கழறுவார்போன்றுகண்டெரியா
மற்றொருகுருடர்குருடருக் குரைக்கும்வழியெனச்சொற்றுரைமயங்
கித்,தெற்றுரைசெய்துதியக்கமுற்றேதுந்தெளிவுறாதவர்களுந்திரளால்

வேறு. வேதம்வருமாகமபுராணவிதியாவு
மோதவருமென்பதனிலொன்றுமுணர்வின்றிப்
பாதம்வருமன்னர்பணியப்பொருள்பறிக்குஞ்
சூதமருமித்தொழில்கொல்சோத்திரியர்செய்கை. (எஎ)

வேறு. சொற்பங்கமறமுயன்றதொலையாநம்பெருந்தவத்தின்றொடர்ச்
சியாலே, கற்பங்கள்பலகோடியிதுவரையிலியாங்கண்டுகளித்தோமா
வி, யற்பங்கொள்பலபிரமாதியர்முடிவுகாண்பரிதோவட்டகோணத்,
தற்பங்கன்றோமன்மனத்தாலசங்கிதனையர்தங்கள்சாவுங்கண்டோம்,

ஆசாரத்தினிற்கொடையிலறிவில்விவகாரத்திலன்பிற்சொல்லும்
வாசாலகத்தினுயர்மதியினிறைசம்பத்தில்வாய்மைதன்னிற்
கேசாதிபாதமுதல்வடிவழகிற்பெரும்புகழிற்கெம்பீரத்தி [றான்.(எக)
லேசாதிப்பெரும்புவனத்தெமக்கிணையாயினரொருவ ரெவரேயென்

சாருவாகன்

வேறு. எடுத்தவுடனன்றுமான்மாவென்றேயிதனையல்லால்வேறு ளதாமிதுபோய்ப்பின்னை, யடுத்தபரலோகத்தும்புசிப்பதுண்டாமு றம்புரிந்தாங்கதன்பயனையென்னுமாசை, கொடுத்தமதுரக்கனியை ப்பலமாய்ப்பெற்றுக்கொள்ளாமலந்தரத்திற்குளிர்ந்ததெண்ணீர்,விடு துவளர்த்தொருதருவையிரதமூறு மென்கனியாங்கதிற்பெறுவார்வி னையம்போலும். (அ0)

வள்ளமுலைமாதரநுபவமுறுமல்வாலிபம்வீண்போகவுபவாசஞ் செய்து, தள்ளரியதவமுயன்றுங்கனிகாய்தின்றுந்தாங்கெட்டுங்கே டுபிறர்தமக்குச்சூழ்வித், துள்ளதுசொல்பவன்றனைப்பொய்சொல் வோனென்றுமுறுவிழியிற்றோன்றுததுண்மையென்றும், விள்ளும வன்றனேமெய்சொல்வானென்றும்விளம்புதுற்புத்தியறிவர்போல் வெய்யோரியாரே. (அக)

நெட்டுடலையிருகூறாய்ப்பிளந்துசீவனிற்பதிற்கண்டவரார்நீர் தாம்பாரும்,விட்டுடலையதுபோனவழியார்பார்த்தார்விண்ணுலகிலிரு ந்ததையார்விளங்கவந்தா, ரெட்டுணையவ்வளவிதற்குள்மெய்யுண்டா னுலின்றுமுதல்யான்சாருவாகனென்னுங், கட்டுரையும்வேண்டேன் பாஷண்டவிஞ்சைக்கல்வியையுமெவர்க்குமினிக்கழறிடேனல். (அஉ)

எவ்வுயிர்க்கும்பிறப்புமவயவமுமொக்குமிதில்வருணபேதமுள வென்றால்மேலா, மவ்வருணத்தவர்க்குறுப்பொன்றதிகமுண்டோவா காயந்தனினின்றுமவர்வீழ்ந்தாரோ, செவ்வியவர்நரைதிரைமூப்பி வைதாமன்றித்தீர்வைபிற்சாக்காடுமின்றிச்சிறந்தார்கொல்லோ, கவ் வையிலாண்பெண்சாதியிரண்டினல்லாற்காசினியில்வேற்றுருவங்கண டார்யாரே. (அங)

பொலிவுறுதாரம்பரதாரங்களென்றும் பொருத்தகுறியுளதோத ம்பொருளீதென்று, மிலகுபரத்திரவியமிதென்றுமாங்கேயெழுத்து வெட்டியிருப்பதுண்டோவெப்பெண்டீரும், வலியவருக்கெப்பொரு ளுந்தமதன்றேகைமாட்டாதார்பிறர்மனையாள்மற்றோர் செம்பொன், னலிபிலதிபாவம்வரும்பழிமேலுண்டுநரகமென்றுபுகல்வரெந்த நாளு ந்தானே. (அச)

பூதமொருநான்கேதத்துவங்களின்பம்பொருளிரண்டேபுருடா ர்த்தம்புலன்களாறே, யேதமிலார்கண்டபிரமாணந்தோற்றுமிவ்வுட லேயான்மாமேலிறப்பேமுத்தி, வேதமதன்பொருளிவையேயென்று மேனாள்விண்ணவர்க்குசற்குருவாய்விளங்குமாசான், சாதுரியச்சாஸ் திரமாய்மகவானுக்குத்தலைநாளிற்சொற்றதுபோற்றன்வேறுண்டோ.

வானமுதமெனவிரதமலிந்ததெண்ணீர்வாவிதமதருகிருக்கமடுந் துண்ணுமற், கானலைநீரென்றோடியுழல்வாரைப்போற்கைபலமாய்க் கிடைத்தவின்பங்கடிந்துபுத்தி, யினர்சிலர்சொன்னபொய்யைமெய் யென்றெண்ணியிவ்வுலகிற்பற்பலபேரிரண்டுங்கெட்டுப், போனவற் குமின்பமுறவிவ்வாறேதிப்புத்திநல்கிநம்மியலிற்பொருத்தினேனால்.

வேறு. மாமகங்கள்புரிவதென்றுவான்பொருளையுங்கெடுத்துவ யிறும்வாடத், தாமமுதமுண்ணுமற்சார்ந்தவர்க்குமிடரியற்றித்தழல் வாய்வெம்பித், தூமமுகத்தினுஞ்சுழன்றுதோகைநல்லாரநுபவமுந்து றந்துசுத்தப், பாமரராய்விழற்கிறைத்துப்பட்டனராலினையரிந்தப்பா வமுண்டோ. (அஎ)

எப்பொழுதெப்பொருளெவருக்கெத்தகையிலெய்தினுமதிகழ்வுறும லப்பொழுதப்பொருளத்தாற்பூசிமுடித்துண்டுடுத்தலவையென்னாளு மெய்ப்பலமாதலினான்மேவுடலேயான்மாநின்னார்போக மொப்பரியமுத்திகண்டதேகாட்சியுண்டதேயுறுதியென்றான். ()

என்பவையாங்கவன்புகலச்சந்தேகனின்பமொக்குமிதற்குளேயுந் துன்பமும்வந்திடையிடையேதொடர்வதுண்டேயென்றிணையசொல்லாமுன்ன, மென்புனலினுரையென்றும்வியனெல்லினுமியென்றும் விடுவோருண்டோ, வன்புடையோர்துன்பகற்றியின்பத்தையென்னாளுமடைவரென்றான். (அகூ)

வேறு. பொல்லாதவர்நன்மைபொருந்துவது
நல்லார்மிகுவன்றுயர்நண்ணுவதுந்
தொல்லார்வினையால்வரினுந்தொடர்பாய்
நில்லாதெனும்வாய்மொழிநிச்சயமே. (கூ0)

வேறு. எறிவேலினுந்தீயவைதன்கணியார்செய்தாலுங்
குறியாமையைத்தானிடும்பாதுகைக்கோலமாக்கிச்
சிறிதாயினுமேயொருகாற்பிறர்செய்தநன்றி
மறவாமையெனுங்கிரணச்சுடர்மௌலிசூடி. (கூக)

வன்பென்பதகன்றடுதேவ்ரும்வந்துள்ளாவி
தன்பங்கிலிரக்கினுமீந்ததசிபோல
வென்பும்பிறர்கேட்கினுமன்பினோடீதலென்னும்
பொன்பொங்கொளிக்கங்கணமுன்கையிற்பூட்டிமாதோ. (கூஉ)

உன்னித்திருமால்சிவனாருட்குண்ணெகிழ்ந்து
மன்னித்தரையிற்பிறர்கோவுமதித்துநெஞ்சந்
தன்னிற்றளர்ந்தன்பிடைமல்குதடங்கணீரா
மன்னித்திலமாலிகைமார்பிலணிந்துமாதோ. (கூங)

மாலாமிருடீர்த்துலகெங்கும்வயங்கியாரு
மேலாமதியோர்கருத்துக்குமெட்டாதுயர்ந்து
மேலாகிவிரிந்தொடுங்காதவியாபகந்தன்
பாலாமதியென்னுமோர்வெண்குடைபாங்கினேங்க. (கூச)

வேறு. தாரகமேதிருமுகமதியொளிருநாதந்தார்குழலாய்ச்சுருதிகளே தாழ்ந்தவள்ளைக்குழையாய், நேரிலகுவிதிமணிகோணுசியர்த்தவாத நீதியாயுகமுமிருநீலவரிவிழியாய்ப், பாரமிகுசற்குணமுநிர்க்குணமுமி ருகரமாப்பகர்சீவபரங்களேபணைத்தபயோதரமா, யாருமறிவரிதாய வாக்கியஞ்சிற்றிடையாயனையபிரகரணமலரடியிணையாயுடையாள்.

வேறு. தாதவிழ்பூங்குழற்கனிவாய்த்தத்தைமொழிமுத்துநகைத்தை யலார்மேற், காதலுறப்புரிசெயலேயென்வடிவாயவரவர்தங்கருத்து ட்டோன்றி, யேதம்விளைவிக்குமென்னுலிரதியாலெனதுசின்னத்திய ல்பாலென்று, மாதரவுற்றின்பமெனுமவ்வலையிலெவ்வுலகோரகப்ப டாரே. (கூஎ)

ஒத்தேறுமுருவமிலாப்பிரமமொன்றுமேயொழியவுருவமுள்ளா, ரெத்தேவராயினுமோர்பூங்கணையாற்றம்போதமெல்லாநீங்கி, மத்தே றியுடைதயிர்போன்மனஞ்சுழன்றுசெயன்மறந்துமடவாராசைப், பித் தேறியிதமுரைத்தப்பேதையர்க்கும்பேதையராய்ப்பின்செல்வாரால்.
வேதமுதலாகியவெண்ணெண்கலையும்பெண்கலைமான் வியந்துகேட்ப வோதியுணர்ந்தும்பிறருக்குரைத்துமுயர்பெரியோர்க்குமுளவிவேகங் காதளவுமடர்ந்துகுழைகடந்துகுமிழ்மறிந்துபெருங்கயலைச்சீறும் பேதையர்கட்கணைபாயுமவ்வளவேயல்லாதுபின்னுமுண்டோ. (கூஅ)

வேறு. வள்ளமாமுலையினார்வாள்விழிப்பார்வையைத்
தள்ளுவார்போனெடுஞ்சபையில்வந்தேறியே
கள்ளமோடுரைசெய்வார்கலவியூடலதுதம்
முள்ளமூடவரைவிட்டொழிவுளார்யாவரே. (கூகூ)

எதிருறத்துடிதுடித்தெரிவிழித்துணைசிவத்
ததிர்கொள்சொற்படபடத்தங்கமும்பதைபதைத்
துதிரமெய்க்குலைகுலைத்துட்கொதித்தெழுசினக்
கொதிபொருப்பவர்களெக்குவலையத்தவர்களே. (க00)

தெருளறக்கல்வியின் றிறனறச்சிந்தையு
டருளறப்பெரிதலைத்தறிஞராமவரையுங்
குருடெனச்செவிடெனக்கொடியர்மற்றிவரெனப்
பொருடெரித்தழலெழப்புகலுவித்திடுவனே. (க0க)

தூயசிந்தையுமறத்துணிவுமுண்டாயினுங்
காயும்வெஞ்சினம்வரிற்கற்றுணர்ந்தோர்களுந்
தாயர்தந்தையர்பெருந்தம்முனுற்றுர்தமக்
கேயநண்புடையரென்றெண்ணவுங்கூடுமோ. (க0உ)

வேறு. உற்றபொருள்பற்றியுதவாமையுருவாமென்
வெற்றியுமுறுதபொருள்வேட்கைவடிவாகு
மற்றெனது'தவியெனும்வாஞ்சையுமலைந்தாற்
கற்றறிவுளாரெனினும்யாரவைகடப்பார். (க0௩)

தங்குபுவிமாந்தரெவர்தாமுமுணர்வின்றிப்
பொங்கிரவுநண்பகலோர்போதுமொழியாதே
யங்கடவிநாடுமலையாள்கடலிவந்தூ
டெங்குமுலைகின்றதமெனிச்சையியலன்றே. (க0ச)

மாதுயரமுற்றெனினும்வஞ்சனைசெய்தேனு
மோதுபொருள்பெற்றதுகோடுள்ளதைமகிழ்ந்தே
யேதமுறுமென்மனைவியிச்சையவடன்னுற்
போதுமிவையென்னுமவர்பூமிசையில்யாரே. (க0ரு)

என்டலமதற்குளவிந்தனமதெல்லா
முண்டிமழலுக்கொழிவுறுதபசியொப்ப
வண்டபகிரண்டமுமகட்டினிடையேயுட்
கொண்டுமொழியாதெனதுகோதையவட்கென்றுன். (க0சு)

வாசவனையாதிமிசைவானவர்தம்முள்ளுங்
காசினியில்மாநுடர்கணத்தினுமிடம்பம்
பேசவருவேடமெவர்பெற்றிலர்பெறுதா
ரேசவருபித்தரிவரேழையெனலாவார். (க0எ)

வித்தகவிவேகமொடுவீறுமழியப்போ
யுத்தமர்குணத்தையுமுலைக்குமவனாலே
யத்தருமபுத்திரனுமன்றொருபொய்சொன்னா
வித்தரையில்யாவரிசையாதவர்பொய்யென்றான். (க0அ)

வேறு. நிகரிலற்பர்சிந்தையூடுநின்றுதூயர்நெறியையு
மிகழுவிப்பனென்னோடேயிறந்துபோமிவ்வுலகெனப்
புகலுவிப்பனெவரொடும்புகுந்துபோர்செய்விப்பனிவ்
வகலிடத்தைமேருவோடோரணுவுமாக்குவிப்பனே. (க0கூ)

அறிவுகற்றகல்விவாய்மையன்புமுன்படுத்தநல்
லுறவுநட்பொழுக்கமேன்மையொருவர்செய்தவுதவிசேர்
பிறவுமின்னசெய்கைமற்றதெவையுநெஞ்சுபேர்வென
மறதியுற்றபோதியாவர்மனிதர்தேவர்மதியுளார். (கக0)

வேறு. எச்சரங்களுந்தமக்கெதிர்ந்துளோர்கள்மேற்
றச்சறக்தையையவர்தமக்குநல்குமாற்
பிச்சரங்கவரெனப்பிறருந்தூற்றவே
மச்சரனயானடுத்தவரைமாய்ப்பனே. (ககக)

அந்தரத்தமரரிலவனிமாந்தரிற்
றந்தவப்பயனெவரவர்க்குத்தக்கது
வந்தடுத்ததுவெனமனங்கொளாதுள்ளே
வெந்தவப்பொறுமையையாவர்வெல்வரே. (ககஉ)

உயிரிறுமெதிரியாலென்பதுன்னியுஞ்
செயிருறுமனத்தராயத்திபமேற்செலும்
வியனுறும்விட்டில்போல்வீழ்ந்தென்மாமகன்
வயிரனால்யாவரேமடிவுறார்களே. (௧௧௩)

வேறு. வணங்குவதெத்தகையோர்க்குமாற்றுவதேயொருவடிவா
யிணங்குமெனக்குமியன்றதெத்தொழிலேனுமியற்றா
துணங்குவனோவெனல்தானேயோர்வடிவாமென்னிலச்சை
யணங்குதனக்குமெதிர்ப்பாராருளருயந்தவராவார். (௧௧௪)

வேறு. மாவராணமேல்வருவாசவன்மற்றுமுள்ள
தேவாசுரர்சந்திரசூரியர்திக்குப்பால
ராவார்பிறருக்குமென்னேவலையன்றியாது
மோவாததமக்குறுசெய்வினையுள்ளதன்றே. (௧௧௫)

சங்கற்பமியான்முயல்வித்ததைத்தாரமாமென்
வெங்கற்பனையன்றியுமியாவர்செய்விக்கவல்லா
ரங்கப்பணியைப்பலவிகற்பமதாக்குவிக்குந்
துங்கப்புதல்வன்றிறலுக்கோர்தொகுப்புமுண்டோ. (௧௧௬)

விண்ணாடரில்வேந்தனுமாந்தரில்வேந்தரென்ன
மண்ணாள்பவருமெனதேவல்மாறாதுசெய்தா
லெண்ணாதெனதாணைகடப்பவரியாவரென்றா
வுண்ணாடிராசதனிவ்வுரையோதினானால். (௧௧௭)

வேறு. பேருலகசத்தோசத்தோபிரமமொன்றோவிரண்டோ
வோருறினரகசொற்கமுள்ளதோவில்லாதேயோ
வாருணர்ந்தவர்தாமென்றேயலைக்குஞ்சந்தேகனென்மு
னேருறினிற்பானந்தநிச்சயன்கொல்லோவென்றான். (௧௧௮)

ஞாலமியாவினையுங்காக்குநளனடிவிளக்கும்போது
சீலமோர்தினையின்பாதிசிதைந்ததேதீதாய்க்கொண்டு
சாலநீள்வனத்திற்போகத்தள்ளினேனென்னிலென்னைப்
போலெவர்புரிவரென்னப்புழுங்குவெங்கலிசொன்னால். (கக௯)

பேரினும்பெரியன்மிக்கபிரப்பினிம்பெரியன்செல்வச்
சீரினும்பெரியன்கல்வித்திறத்தினும்பெரியன்றெவ்வர்
போரினும்பெரியன்மற்றெப்பொருளினும்பெரியன்யானே
யாரினும்பெரியனென்னுமென்னையாரடக்கற்பாலார். (க௨0)

வாசநாண்மலருளோனுமாயனுந்தம்மைத்தானே
பேசினர்பெருமையென்னாற்பிஞ்ஞகனடக்குவான்போ
லாசறுமென்பாற்காண்டிரடிமுடியார்க்குமியானே
யீசனென்றுரைத்தானென்னிலேவரென்னியல்புறுதார். (க௨க)

அமைவுறாதெழுந்துபொங்கியாரினுங்கீழோரேனுந்
தமைமிகத்தாமேயெண்ணிச்சங்கியாதெவர்முன்னேயு
மெமதியாமெமக்கொப்போவவ்வீசனுமென்றெண்சொல்லி
மமதையாலென்னலியாரேமானிலத்துரைசெயாரே. (க௨௨)

வேறு. வள்ளலங்கதுவினவமண்டுதெண்டனையில்ல
தெள்ளுமென்கழையுமதியினருந்தருபயன்
துள்ளதென்றெவர்புகலவரோதுமின்சொலினனையர்
கள்ளநெஞ்சொருசிறிதுகனிவதெங்ஙனவிலையும். (க௨௩)

வேறு. எழுகுறும்பிபெருகுகாதைவள்ளையென்பரிகழ்கரும்
புழுவடர்ந்தகுழலிருண்டபுயலதென்பர்பீழைநீ
ரொழுகுகண்கள்குவளையென்பர்தரளமென்பருயிரொடும்
பழுதுறும்பலென்பையின்னபகர்வதென்னபாவமே. (க௨௪)

எச்சிறங்குவாய்விழிம்புபவளமென்பரெழுமிரண்
டச்சிவர்திகொங்கையானையாகுமென்பரதுபெருங்
கச்சிலங்கிருந்துமாவிகவருகின்றதென்பராற்
பிச்சிலங்கவர்க்குநேர்பிராந்தர்யாவர்பேசிலே. (கஉரு)

நாசியூறல்கோழையெச்சிறுறுமாமுகத்தையே
மாசுறாதபூர்ணசந்திரவட்டமென்பரொட்டுவைத்
தேசுறுநரம்பினைக்கொடென்புகட்டமைத்ததோள்
வீசவீசநெஞ்சழிந்துவேணுவென்பர்காணுமே. (கஉசு)

குடர்நரம்புதசைவழும்புகுருதியென்புசுக்கில
முடைகிடந்தபொந்தின்மேலோர்தோல்விரித்துமூடியே
யடர்வுறும்பல்துளைகடோறுமருவருப்புறுமலம்
படர்தல்கண்டுமிதனையேகொல்மகளிரென்றுபகர்வதே. (கஉஎ)

வேறு. கூராரும்வேல்விழியார்கோலாகலங்களெல்லாந்
தேராதசிந்தையரைச்சிங்கிகொள்ளுமல்லாம
னேராயுளமிற்குநிலையுணர்ந்துநற்கரும
மாராய்பவருக்கருவருப்பதாய்விடுமே. (கஉஅ)

வாலவயதின்மயக்குமடமங்கையருங்
காலமகன்றதற்பின்கண்டெவருமேயிகழ
நீலநறுங்குழலுநீடழகுநீங்கியவர்
கோலதொருகையூன்றிக்கொக்குப்போலாயினரே. (கஉகூ)

வீசியதுற்கந்தம்வெளிப்படுந்தம்மெய்யிலெனக்
கூசிமறைப்பதன்றேற்கோற்றொடியாரங்கமெங்கு
நாசிமணக்கநறுங்குங்குமச்சுகந்தம்
பூசிமுடித்தல்பசிபோக்கும்பொருட்டேயோ. (கங0)

மாற்றறியதம்மூத்தைவாய்திறக்குமுன்னமெழு
நாற்றமறைக்கவன்றேனுவழித்துப்பல்விளக்கிக்
கோற்றொடியார்நன்னீருங்கொப்பளித்துப்பாகுசுருள்
தீற்றுவதுமென்னுதலைதீர்க்குமருந்தென்றேயோ. (கஙக)

சனகன்முதலோர்பிருங்கிதத்தாத்திரியானு
மனகசுகர்நாரதனுரானதுருவாசர்
புனிதசடபரதர்போதாயினரென்
றினையர்தமைமாதரெழினலமென்செய்ததுவே. (கஙஉ)

